# கர்த்தர் செய்த உபகாரங்கள்

இந்த வருடத்தின் கடந்த நாட்களை திரும்பி பார்த்து, காலைதோறும் தேவன் நம்மேல் பொழிந்த அருவருடைய புதுக் கிருபைக்காக அவருக்கு நாம் நன்றி செலுத்துவதே நமக்கு ஏற்புடையதாயிருக்கும். சில வேளைகளிலே, நான் எதற்காக நன்றி சொல்ல முடியும், நான் கேட்டதை கர்த்தர் எனக்கு தரவில்லையே என்று சசில விசுவாசிகள், தங்களுக்குள் நொந்து கொள்ளலாம். ஒரு சிறு பையனானவன் தன் தகப்பனிடம் தன் அறிவுக்கெட்டியபடி, தன் தன் மனத்திற்கு விரும்பான காரியங்களை தன் தகப்பனானவரிடம் கேட்கின்றான். அவற்றில் சிலவற்றை தகப்பனானவர், அவனுக்கு தற்போது தடை செய்து வைத்திருந்தால், அவன் தன் அதிருப்தியை பல வழிகளிலே காண்பித்துக் கொள்வான். நான் நேசிக்கும் என் தகப்பனானவர், ஏன் நான் கேட்பதை எல்லாம், உடனடியாக தரமால் காலம் தாழ்த்துகின்றார் என்று மனக்குழப்பம் அடைவான். ஆனால், காலங்கள் கடந்து சென்று, அவன் அறிவுக்கு வரும் போது, தன் தகப்பனானவர் தன்னை வழிடத்தி வந்த வழிகளை நினைத்து பெருமிதமடைவான். அதுபோலவே, பல காரியங்கள் நமக்கு புரியாத புதிராக இருக்கலாம். ஆனால், நம்முடைய பரம தகப்பனானவர் நம்மை நேசிக்கின்றார் என்றும், அவர் ஒருபோதும் தீமை செய்யமாட்டார் என்றும் நீங்கள் அறிந்திருக்தால், அவருடைய நேரத்திற்காக காத்திருங்கள். கடந்த நாட்களிலே, நாம் அறிந்தோ அறியாமலோ பல தவறுகளை செய்திக்கலாம். நீங்களும் நானும் மாத்திரமல்ல, உங்களுக்கு அன்பானவர்களும், எனக்கு அன்பானவர்களும் கூட சொல்லாலும், செயலாலும், சிந்தனைகளாலும், பல முறை வழிவிலகிப் போயிருக்கலாம். ஆனால், ஒவ்வொரு முறையும், நாம் அழிந்து போகாதபடிக்கு, அவருடைய கிருபை நம்மை தாங்கி வழிநடத்தி வருகின்றது. அவர் ஒருபோதும் நம்மை கைவிடமாட்டார். மனதுருக்கமுள்ள நம்முடைய பரம பிதாவானவர், ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நாம் அறிந்த நன்மைகளோ கொஞ்சம், நாம் அறியாதவைகளோ அநேகம், பொதுவாக நாம் அவரிடம் கேட்பவைகளோ அநித்தியமானவைகள், ஆனால் அவர் நமக்காக வைத்திருப்பதோ மேலானவைகள். எனவே, கர்த்தரை முழு உள்ளத்தோடு அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரியுங்கள். அவர் செய்ய நன்மைகளை நினைத்து அவருக்கு நன்றி சொல்லுங்கள்.

**சங்கீதம் 103:2**

**என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.**

**ஜெபம்:** நன்மைகளின் ஊற்றாகிய என் தேவனே, நீர் எனக்கு செய்த நன்மைகளை நான் ஒரு போதும் மறந்து போகாமல், நன்றியறிதலுள்ளவனாக இருக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பலவித போதனைகள்

ஒரு வாலிபனானவன், தன் சிறு பிராயத்திலே தன் தகப்பனானவரின் சொல்லை தட்டிக் கழிக்காமல், அவைகளை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்கள் போல, பெருமையயோடு கைகொண்டு வந்தான். வாலிப பிராயத்தை அடைந்த பின்னர், தன் தகப்பனானவரின் நல் ஆலோசனைகள் அவன் மனதிலே கசப்பை உண்டு பண்ண தொடங்கிவிட்டது. அதனால், வேறு எங்கேயாவது, தான் விரும்பிய பிரகாரமாக வாழ, தனக்கேற்ற ஆலோசனைகள் கிடைக்குமா என்று வேறு ஆலோசகர்களை தேடினான். பாடசாலையிலுள்ள சில ஆசிரியர்கள், தன் நண்பர்களின் தகப்பன்மார் போன்றவர்கள் பொதுவான ஆலோ சனைகளை வழங்கி னார்கள்.

**எபேசியர் 4:14**

மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்

அந்த ஆலோசனைகள் அவனுடைய தனிப்பிட்ட பெலவீனங்கள், தவறான வழிகளைக் குறித்து நேரடியாக சுட்டி காட்டாததால், அந்த ஆலோசனைகளை ஆர்வத்தோடு கேட்டான். ஆலோசனை கூறியவர்களும் அவன் ஒரு கீழ்படிவுள்ள மாணவன் என்றே கூறிக் கொண்டார்கள். ஆனால், அவனுடைய தகப்ப னானவரைப் போல, அவனுடைய உண்மையான பிரச்சனை என்னவென்று அவர்கள் அறியாதிருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், அவனுக்கு ஆலோசனை வழங்கியவர்கள் அவனைக் குறித்த எந்த பொறுப்பும் இல்லாதவர்களாகவே இருந்தார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்கள் தேவனை ஆராதித்து, சேவிக்கும்படிக்கு சத்திய வார்த்தைகளை சுத்தமாக பேசும் ஆவிக்குரிய வழிநடத்துதலை தரும் ஒரு சபையை தெரிந்து கொள்ளுங்கள். அதை நிச்சயப்படுத்திக் கொண்ட பின்பு, அங்கே உங்களுக்கு கொடுக்கப்படும் ஆலோசனைகளை கேளுங்கள். சில ஆலோசனைகள் கசப்புள்ளதாக தோன்றலாம். ஆனால், அந்த நேரத்திலே வேத வார்த்தையின் வெளிசத்திலே உங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்து, வேதனையுண்டாக்கும் வழிகள் ஏதேனும் இருக்குமென்றால், அவைகளை விட்டுவிடுங்கள். கர்த்தர் ஏற்படுத்திய ஒழுங்குகளுக்கு கீழ்படியுங்கள். நாட்கள் பொல்லாதவைகளாக இருப்பதால், போதனைகள் மாற்ற வழிதேடாமல், உங்கள் மனதை தேவ வார்த்தையின்படி மாற்றிக் கொள்ளுங்கள். மந்தைகள் மேய்ப்பனின் சத்தத்திற்கு கீழ்படிக்கின்றது. பிரதான மேய்ப்பராகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசுவே, நம்மை வழிநடத்த மேய்ப்பனை ஏற்படுத்தியிருக்கின்றார்.

**ஜெபம்**: நிலைத்திருந்து கனிகொடுக்கும்படி என்னை அழைத்த தேவனே, காற்றுக் அடிப்பட்டு திரியும் அலைகளைப் போல, என் மனம் அங்கும் இங்குமாக அலைந்து திரியாதபடிக்கு என்னை உம் வழியிலே நடத்துவீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# களைகளும் கனிதரும் மரங்களும்

நாட்கள் பொல்லாதவைகளாக இருப்பதால் காலத்தை ஆதயப்படுத்துக் கொள்ளுங்கள். நாட்கள் எண்ணும் அறிவடையும்படிக்கு, ஞானமுள்ள இருதயத்தை வாஞ்சியுங்கள். எல்லாவற்றையும் வேத வார்த்தைகளின் வெளிச்சத்திலே ஆராய்ந்து பார்த்து, நலமானதை பற்றிக் கொள்ளுங்கள். கள்ளப் போதனைகளுக்கு விழிப்புள்ளவர்களாயிருங்கள். ஆட்டுத்தோல் போர்த்த ஒநாய்கள் ஆங்காங்கே இருக்கின்றார்கள் என்று பரிசுத்த வேதாகமம் நமக்கு எச்சரிப்பை வழங்கியிருக்கின்றது. அன்று மட்டுமல்ல, இன்றும் அப்படிப்பட்டவர்ள் நம் மத்தியிலே இருக்கின்றார்கள். இவர்ளை எப்படி அறிந்து கொள்ளலாம் என்பதை பரிசுத்த வேதாகமம் வழியாக அறிந்து கொள்ளுங்கள். இந்த பூழியிலே ஒரு பலன் தரும் மரமொன்றை சிறு கன்றாக நட்டு, அது மரதாக வளர்ந்து கனி கொடுக்கும் காலம் வரை காலத்திற்கு காலம், பருவத்திற்கு பருவம் பராமரிப்பது கடினமானதா அல்லது பிரயோஜனமற்ற களைகளை வளர்ப்பது கனடினமானதா? களைகளை ஒருவரும் விதைக்க வேண்டிய அவசியமில்லை. அதைப் பராமரிப்பதற்கு நிலத்தை பண்படுத்த தேவையுமில்லை. அது தானாவே இந்தப் பூமியிலே பரவி, வளர்ந்து வருகின்றது. ஆனால், கனி கொடுக்கும் மரத்தை நாம் நன்றாக பராமரித்து வளர்க்க வேண்டும். அதின் உயரத்தினால் அல்ல, அதன் தண்டின் பரமனினானல் அல்ல, அது செழிப்பாக வளர்ந்திருப்பதினால் மாத்திரம் அல்ல, மாறாக, அதன் கனியினாலே அது நல்லதோ அல்லது கெட்டதோ என்று நிர்ணெயிக்கப்படும். அதுபோலவே, ஒரு மனிதனின் வாழ்விலே இருக்கும் வரங்களினாலே மாத்திரம் அல்ல, அவனுடைய செழிப்பான உலக வாழ்வினால் அல்ல, அவன் சமுக அந்தஸ்தினாலே அல்ல, சத்திய வேதம் கூறும் கனி அவன் வாயில் மாத்திரமல்ல, அவன் வாழ்வில் இருக்கின்றதா என்று ஆராய்ந்து பாருங்கள். புசிப்பதற்காக புளிப்பானதும், கசப்பானதும், ஆகாததுமான கனிகொடுக்கும் வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கையல்ல. அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் போதகர்களுமல்ல. எனவே, வெளிதோற்றங்களினாலே அல்ல, உலகத்தினால் உண்டான ஆசீர்வாதகளினாலேயல்ல, அவர்களை பின்பற்றும் ஜனத் தொகைகளினாலேயுமல்ல, அவரவர் தங்கள் சொந்த வாழ்க்கையிலே கொடுக்கும் கனிகளினாலே, தேவனுடைய போதகர்கள் யார் என்பதை நீங்கள் நிதானித்து அறிந்து கொள்ளலாம் என்று ஆண்டவராகிய இயேசு தாமே நமக்கு முன்னதாகவே கூறியிருக்கின்றார். சத்திய ஆவியானவர்தாமே உங்களுக்கு துணையாக இருக்கின்றார்.

**மத்தேயு 7:20**

ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.

**ஜெபம்**: பரிசுத்தமும் உண்மையுமுள்ள தேவனே, வெளியான கிரியைகளைப் பார்த்து நான் இழுப்புண்டு போகாமல், வஞ்சிக்கும் ஆவிகளை நிதானித்து அறியும்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சத்திய வழியிலே நடவுங்கள்

ஒரு சமயம் திரளான ஜனங்கள் ஆண்டவராகிய இயேசுவிற்கு பின் சென்றார்கள். ஆண்கள் மாத்திரம் ஏறத்தாழ ஐயாயிரம் பேர்கள் இருந்தார்கள். அநேக மணிநேரம் அவருடைய போதனைகளை கேட்டார்கள். அவர்களை பசியோடு அனுப்பிவிட மனதிருல்லாதிருந்ததால், ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் பலுகச் செய்து, அவர்கள் யாவரையும் அற்புதமாக போஷித்தார். மறுநாள் வரைக்கும், அநேகர் அவரை பின்பற்றி சென்றார்கள். அவர்களின் வயிறு நிரம்பியதேயல்லாமல், அவருடைய ஆன்மீக போதனையினாலேயே அவர்கள் மனம் நிரம்பவில்லை என்று அறிந்த ஆண்டவராகிய இயேசு, அற்புதத்தை கண்டதினாலல்ல, நீங்கள் அப்பம் தின்று திருப்பதியானதினாலே தான் என்னை பின்பற்றுகின்றீர்கள் என்று அவர்களின் உண்மையான நிலைமையை கூறினார். தன்னை பின்பற்ற என்ன செய்ய வேண்டும் என்று ஆண்டவர் இயேசு விளக்கிக் கூறிய போது, அநேகர் இது கடினமாக உபதேசம் என்று கூறி, அவரைவிட்டு பின்வாங்கிப் போனார்கள். அநேகமாயிரம் திரள் கூட்டம் இப்போது, விரல்விட்டு எண்ணும் சிறு கூட்டமாக மாறிவிட்டது. நித்திய வாழ்விற்கென்று அழைப்பை பெற்ற பிரியமான சகோதர சகோதரிகளே, "இடுக்கமான வாசல் வழியாக உட்பிரவேசியுங்கள், கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது, அதின் வழியாய் பிரவேசிக்கின்றவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகின்ற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கின்றது, அதை கண்டு பிடிக்கின்றவர்கள் சிலர்" என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். இது மனிதர்களுக்கு கடினமான உபதேசம். இடுக்கமான வாசல். அது உண்மை. ஆதனால் தான், நமக்கு வழியை காண்பிக்கும்படி ஆண்டவராகிய இயேசு இந்த பூமிக்கு வந்து, வாழ்ந்து காட்டினார். நம்மை சகல சத்தியத்திலும் வழிநடத்திச் செல்லும்படிக்கு என்றென்றும் நம்மோடு இருக்கும்படிக்கு சத்திய ஆவியை பிதாவனாவர் நமக்கு கொடுத்திருக்கின்றார். உபத்திரவங்களிலே வெற்றியையும், பாடுகளின் மத்திலே மனச் சமானதானத்தையும் நமக்கு கட்டளையிடுகின்றார். எனவே, வேற்றுமையான, சுகபோக வாழ்வின் போதனைகளுக்கு விலகி ஓடுங்கள்.

**மத்தேயு 7:15**

**கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, மாசத்தின் பெலத்தினால் அல்ல, நீர் எனக்கு தரும் ஆவியினாலே நான் தடைகளை தாண்டி, உம்முடைய சித்தத்தை என் வாழ்விலே நிறைவேற்றி முடிக்க எனக்கு பெலன் தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# செயற்பாடுகளும் கனிகளும்

வெளியூருக்கு வியாபார அலுவலாக செல்ல வேண்டியிருந்த பண்ணை முதலாளியொருவர், தன் மூத்த குமாரனை அழைத்து, தான் திரும்பி வரும்வரை, உன் சகோதர சகோதரிகளின் விவகாரங்களை நன்றாக கவனித்துக்கொள் என்று பல ஆலோசனைகளை கூறி, குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் அதிகாரத்தையும், செலவுக்கு வேண்டிய பணத்தையும் கொடுத்து சென்றார். தந்தையானவர் சென்றபின்பு, மூத்த குமாரனானவன், குடும்பத்தின் விவகாரங்களை கவனிக்கும்படி பல நன்மையான காரியங்களை செய்துவந்தான். ஆனால், தந்தையார் கூறியத்தின் கருபொருளை விட்டு விட்டு, தனக்கு இலாபம் உண்டாகக்கூடிய பிரகாரமாக காரியங்களை செய்து வந்தான். அவன் சகோதர சகோதரிகளும் சில நன்மைகளை அடைந்தார்கள், ஆனால் மூத்த குமாரனானவனோ, தந்தையார் கூறிய கருப்பொருளை விட்டு, தனக்கு கிடைத்த அதிகாரத்தையும், பொறுப்பையும், ஐசுவரி யத்தையும், சுய இலாபம் கருதி, தனக்கு பெயரு ண்டாக்க காரியங்களை முன்னெடுத்து வந்தான். சில காலத்திற்கு பின், தந்தையார் வீடு திரும்பிய போது, தன் மூத்த குமாரனின் செயல்களை யும் அதன் கருப்பொருளையும் அறிந்த போது, தன் மூத்தகுமாரன் மேல் கோபம் கொண்டார். பிரியமான சகோதர சகோதரிகளே, அந்த மூத்த குமாரனுக்கு அதிகாரமும், பொறுப்பும், ஐசுவரியமும் கொடுக்கப்பட்டது. அவன் வாழ்விலே நன்மையான செயற்பாடுகள் இருந்ததை ஒருவரும் மறுக்க முடியாது. ஆனால், அவன் தந்தையாரின் சித்தத்தை நிறை வேற்றி முடித்தானோ என்பதை சிந்தித்துப் பாருங்கள். அவனுடைய செயற்பாடுகள் நன்மைக்குரியதாக இருந்தபோதும், அவன் இருதயத்திலே, மாம்சதத்தின் எண்ணங்கள் தலைதூக்கி இருந்ததால், அவன் கனியற்ற வாழ்க்கை வாழ்பனாகவே இருந்தான். நம்முடைய கர்த்தரும், உண்மையுள்ளவர்கள் என்று கருதி, வரங்களையும், வளங்களையும் தம்முடைய பிள்ளைகளுக்கு கொடுக்கின்றார். அவைகளை சிலர், தங்கள் சுய இலாபத்திற்கும், தங்களுக்கும் தங்கள் சந்ததிக்கும் பெயரும் புகழும் உண்டாக்க பலசெயற்பாடுகளைகர்த்தரின்நாமத்திலே செய்கின்றார்கள். ஆனால், கனியற்ற அவர்களை கர்த்தர் உண்மையும் உத்தமுமுள்ள ஊழியனே என்றுஅழைப்பாரோ?அல்லது உங்களை அறியேன் என்று சொல்வாரோ?

**மத்தேயு 7:21**

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

**ஜெபம்**: பரலோக தேவனே, உம்முடைய நாளிலே, உமக்கு முன்பாக உண்மையும் உத்தமமுள்ளவனாக நான் நிற்கும்படிக்கு, இந்நாட்களிலே உம்முடைய திருச்சித்தத்தை செய்ய என்னை வழிடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வரங்களும் வளங்களும்

பிதாவாகிய தேவன்தாமே தம்முடைய பிள்ளைகளுக்கு வரங்களைளும், வளங்களையும் பகிர்ந்து கொடுகின்றார். அதற்கான காரணம் என்ன? பிதாவினுடைய சித்தம் இந்தப் பூமியிலே நிறைவேறும்படிக்கு, வரங்களையும், வளங்களையும் பெற்றுவர்கள், தங்கள் சொந்த வாழ்விலே பிதாவாகிய தேவனின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும். அவருடைய சித்தத்தை நிறைவேற்றாதவன், யாருடைய சித்தத்தை செய்கின்றான்? தன் மாம்சமும் உலகமும் விரும்புவதை செய்கின்றான். அந்த உலகமும் மாம்சமும், தேவ சித்தத்திற்கு எதிராக செய்படுகின்றவைகளாக இருந்தால், அவை எதற்கு அடிமையாக இருக்கின்றது? நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கி றோம் *(1 யோவான் 5:19)* என்று பரிசுத்த வேதாகமம் இந்த உலகத்தின் ஆளுகையைக் குறித்து தெளிவாக நமக்கு கற்றுத் தருகின்றது. தன் மாம்சம் விரும்புவதை செய்பவனிடதிலே ஆவியின் கனி இருக்க முடியாது. அவர்களில் சிலர் தாங்கள் பெற்றவைகளை, கர்த்தரின் நாமத்தை கூறிக் கொண்டு, தகாதவிதமாக பயன்படுத்துகின்றார்கள். ஆதலால் ஆண்டவராகிய இயேசு: பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல் லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தி னோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய் தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங் களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்றார். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது. இந்த உலக பொருட்களின் ஆசீர்வாதத்தையும், செல்வ செழிப்பையும் மையமாக வைத்து உபதேசம் செய்கின்றவர்களைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம். அவர்களின் முடிவை நியாயந்தீர்ப்பது நம்முடைய வேலையல்ல, நாமோ, வேதப் புரட்டர்களை விட்டு விலகி, சத்தியத்திலே நிலைத்திருந்து, தேவ சித்தத்தை நிறைவேற்றுவோமாக.

**தீத்து 3:10**

வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனைவிட்டு விலகு.

**ஜெபம்:** சகலமும் அறிந்த தேவனே, இந்த உலகத்தினால் உண்டான வஞ்சகமான உபதேசங்களில் நான் சிக்கிக் கொள்ளாதபடிக்கு, கற்றுக் கொண்டபடியே விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நல்ல ஆதாரமாகிய பொக்கிஷம்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொருவனுக்கு நூற்றுக் கணக் கணக்கான ஆடுமாடுகளும், வளங்களும் இருந்தது. வருடாவருடம் அவை பெருகிக் கொண்டே போனது. அந்த ஊரிலே ஏழை எளிய வர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஒரு திட்டத்தை அவன் ஏற்படுத்தி அதை அமுல்படுத்தி வந்தான். தன்னிடம் இருக்கும் ஏராள மான ஆடுகளிலே ஒன்றை எடுத்து ஏழைகளுக்கு என்று கொடு த்துவிட்டு, ஊரிலே, ஒரு சில ஆடு களோடு தங்கள் வாழ்க்கையை நட த்திவரும் பாமர குடி மக்களிடம், அதிகமாக கொடுக்கும்படிக்கும், கொடுத்தால், தன்னைப்போல அதி கமாக பெருகி வரும் என்றும் அவர் களுக்கு உபதேசித்து வந்தான். அப்படி செய்வதானால் ஊரிலும், பட்டணத்திலும், தன் பெயரையும் புகழையும் பெருகச் செய்தான். பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கும்படி அழைக்கப்பட்ட அருமையான சகோதர சகோதரி களே, கள்ளப் போதகர்களைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இரு ங்கள் என்று வேதத்திலே நமக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கி ன்றது. கள்ளப் போதகர்கள் மத்தியிலே பொதுவாக காணப்படும் ஒரு பொதுவான காரியம் என்னபதை நன்றாக அறிந்து கொள்ளுங்கள். பொருளாசையே அவர்களின் பொதுவான சின்னமாக இருக்கும். தேவன் தங்களை ஆசீர்வதித்து பெருகப் பண்ணுகின்றார் என்று தங் களை குறித்து பெருமிதமாக கூறி, தங்கள் வாழ்க்கைத் தரத்தை இந்தப் பூமியிலே உயர்த்திக் கொண்டே செல்கின்றார்கள். மேலே குறிப்பிட்ட சம்பவத்தைப் போல, கல்வி, ஆஸ்திகள், அந்தஸ்துக்கள் என்று அவ ர்கள் தங்கள் குடும்பங்களை இந்தப் பூமியிலே பெருகப் பண்ணிக் கொண்டு,தங்களிடம் மிகையாயிருப்பதில், மட்டாக ஏழைகளுக்கு கொடு த்து, எளிமையான வாழ்க்கை வாழும் விசுவாச குடும்பங்களை நோக்கி கொடுங்கள்,அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும் அமுக்கிக் குலு க்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார் கள் என்ற வசனத்தை ஊருக்கு உபதேசம் பண்ணுவார்கள். பிரியமான வர்களே, நம்முடைய குடியிருப்பு இந்தப் பூமிக்குரியதல்ல. நித்திய ஜீவனை பற்றி பிரசங்கித்து, அதை தங்கள் சொந்த வாழ்க்கையில் கைக்கொண்டு, கனிகொடுத்து வாழ்பவர்களை நீங்கள் பின்பற்றுங்கள்.

**1 தீமோத்தேயு 6:19**

**நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி வருங்காலத் திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷ மாக வைக்கவும் அவர்களு க்குக் கட்டளையிடு**

**ஜெபம்**: ஜீவனுள்ள தேவனே, நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன் மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற உம்மேல் நம்பிக்கை வைத்து வாழும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | ஒக்டோபர் 8 | 📖 மாலை வாசகம் – 2 பேதுரு 2:1 – 3

# பின்னிட்டு விழுந்து போகதபடிக்கு...

ஒரு சமயத்திலே தேவ ஊழியர்களாகிய பவுல் மற்றும் லூக்காவோடு சேர்ந்து ஊழியம் செய்து வந்த தேமா என்னும் ஊழியக்காரனானவன், ஊழியராகிய பவுல் பல நெருக்கங்கள் மத்தியிலே இருக்கும் வேளை யிலே, அவரை கைவிட்டு விட்டு, சென்று விட்டான். அவன் இந்த உலக த்தின்மேல் ஆசை வைத்ததால் பின்வாங்கிப் போனான். பரலோகத் தின்மேல் வாஞ்சை வைத்து, இந்த உலக ஆசைகளை துறந்து ஊழி யத்திற்கு சென்றவன், இப்போது, பரலோகத்தின் மேலுள்ள வாஞ் சையை துறந்து, பிசாசின் பிடியி லிருக்கும் இந்த உலகத்தின் மேல் ஆசை வைத்து பின்வாங்கிப் போனான். இன்றைய நாட்களிலே, சிலர், ஒருமுறை மனந்திரும்பினால் போதும், அதன்பின்பு, என்ன நட ந்தாலும் பரவாயில்லை, உனக்கு நித்திய ஜீவன் கிடைக்கும் என்று பிரசங்கித்து வருகின்றார்கள். ஆதியிலே நல்மனதோடு பரலோகம் நாடிச் சென்ற சிலர், பாதியிலே பின்வாங்கி இந்த உலகத்தின் ஆசையினால் இழுப்புண்டு போய்விடுவதைக் காண்கின்றோம். ஊழி யர், விசுவாசிகள் என்று நாம் வகைப் படுத்திப் பேசினாலும், நாம் யாவரும் விசுவாசிகளாகவே இருக்கின்றோம். ஊழியர்கள் என்று அழை க்கப் படுகின்றவர்களும், விசுவாசிகள் என்று அழைக்கப்படுகின்ற வர்களும், பின்வாங்கி உலகத்தை பின்பற்றி செல்லுகின்றதை குறித்து அநேக திருஷ்டாந்தங்களை வேதத்தில் காண்கின்றோம். சத்தியத்தை விட்டு விலகி, உலகத்தின் போதனைகளை போதிக்கின்றவர்களை கள்ளப் போதகர்கள் அல்லது கள்ளத் தீர்க்கதரிசிகள் என்று வேதம் வகையறுத்துக் கூறுகின்றது. கள்ளப் போதகர்களாக இருப்பவர்கள் ஆரம்பத்திலிருந்து அப்படியாகவே மனிதர்களை வஞ்சிக்கின்றவர்களாக இருக்கலாம். அல்லது தேமாவைப் போல, பாதி வழியிலே இழுப்புண்டு போயிருக்கலாம். அவர்கள் மனந்திரும்பி, கர்த்தரித்தில் திரும்பாத பட்சத்தில், அவர்கள் கள்ளப் போதகர்களாகவோ அல்லது கள்ளத் தீர்க்கதரிசிகளாவோ இருப்பார்கள். அவர்கள் தண்டனைக்கு தப்பார்கள் என்று அவர்களின் முடிவை குறித்து பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. பிரியமானவர்களே, கற்றுக் கொண்டவைகளிலே உறுதியாய் நிலை த்திருங்கள். பக்க வழியாய் நுழையும் சிலர், இலகுவான வஞ்சிக்கும் போதனைகளோடு உங்களை வஞ்சிக்கும்படி வருவார்கள். நீங்களோ அந்த கண்ணிக்குள் அகப்படாதபடிக்கு, ஜெபத்திலும், வேதத்தின் தியானத்திலும் தரித்திருங்கள்.

**2 தீமோத்தேயு 3:14**

நீ கற்று நிச்சயித்துக்கொ ண்டவைகளில் நிலைத்திரு

**ஜெபம்**: அன்பின் தேவனே, பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் நான் சத்திய மார்க்கத்தைவிட்டு விலகி போகாதபடிக்கு, விழிபுள்ளவனாக வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | ஒக்டோபர் 9

📖 மாலை வாசகம் – எபிரெயர் 10:25 –27

# சத்திய மார்க்த்திலே நடவுங்கள்

தேவ பக்தியின் வேஷத்தை தரித்து, தங்கள் பொருளாசையை, தேவ ஆசீர்வாதம் என்று பிரசங்கித்து, விசுவாசிகளை வஞ்சிக்கின்றவர்கள், சத்திய மார்க்கத்தைவிட்டு, பின்வாங்கிப் போய் மறுபடியும் மனந் திரும்பாமல், மனப்பூர்வமாக தங்களை பாவத்திற்கு ஒப்புக் கொடுத்து வாழ்கின்றவர்கள் தண்டனைக்கு தப்பார்கள் என்று பரிசுத்த வேதா கமம் தெளிவாக கூறுகின்றது. நாம் ஏன் இதை இந்நாட்களிலே தியானிக்கி ன்றோம்? பிரியமானவர்களே, நீங் கள் ஒருமுறை மனம்திரும்பினால் போதும்,என்றும் அதன்பின்னர் உங் கள் வாழ்வு எப்படியாக இருந்தா லும், உங்களுக்கு நித்திய ஜீவன் நிச்சயம் என்று பிரசங்கித்து வருகி ன்றவர்கள் பெருகிக்கொண்டிருக் கின்றார்கள். நாம் கற்றுக் கொண்ட சத்தியத்திலே உறுதியாய் தரித்தி ருக்கும்படிக்கு இந்த மாதத்திலே, நாம் பரிசுத்த வேதாகமத்திலிருந்து சில வார்த்தைகளை இந்நாட்க ளிலே தியானம் செய்வோம். “கள் ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங் களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள் அவர்கள் கேட்டு க்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழைய ப்பண்ணி, தங்க ளைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்க ளுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள் அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர்களாய், தந்தி ரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்ப டுத்திக்கொள்ளுவார்கள் பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. (2 பேதுரு 2:1-3). ஆம் பிரியமா னவர்களே, இப்படிப்பட்டவர்களை அநேகர் பின்பற்று வார்கள். ஏனெ னில், அது விசாலமானதும், இலகுவானதும், உலகத் தோடு ஒத்து வாழ் வதற்கு ஏற்புடைய உபதேசமுமாயிருக்கும். அழிவிலிருந்து மீட்கப்பட்ட நாம், மறுபடியும் அழிவுக்குத் திரும்பாமல், நித்திய ஜீவனைக் குறித்து போதிப்பவர்களுடைய வார்த்தையை கேட்போமாக. கொடுக்கப்பட்ட கிருபையின் காலத்திலே, மேலானவைகளை தேடுவோமாக.

**ரோமர் 2:4**

அல்லது தேவதயவு நீ குண ப்படும்படி உன்னை ஏவுகிற தென்று அறியாமல், அவ ருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணுகிறாயோ?

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, சத்திய மார்க்கமானது என்னிமித்தம் தூ ஷிக்கப்படாதபடிக்கு, நான் தந்திரமான பொருளாசை சார்ந்த வேதப்புரட்ட லுக்குஇடங்கொடுக்காதபடிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழி நடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விசுவாசிகள் மனந்திரும்ப வேண்டிய இடங்கள்

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்து, பரத்திற்கு சென்றபின்பு, தன்னுடைய பிரியமான சீஷனாகிய யோவானுக்கு தரிசனமாகி, அந்த சீஷனூடாக மனந்திரும்புதலின் அவசியத்தை குறித்து சபைகளுக்கு எச்சரிப்பை கொடுத்திருக்கின்றார். எபேசு என்னும் சபைக்கு அவர் கூறும் போது: உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும் நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன் என்று அவர்களுடைய கிரியைகளையும் பொறுமையும் குறித்து பாராட்டிக் கூறினார். ஆனாலும், இவ்வளவு நற்கிரியைகளை செய்கின்ற அந்த சபையார் மறுபடியும் மனந்திரும்ப வேண்டிய குறையொன்று அவர்களிடம் இருந்தது. மேலும் அவர் கூறுகையில் "நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக என்று ஆலோசனை கூறினார். அப்படி அவர்கள் மனந்திரும்பாத இடத்தில் என்ன நடக்கும் என்று அவர்களுக்கு எச்சரிப்பை வழங்கினார். "இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன் என்றார். அவருடைய எச்சரிப்பைக் கேட்டு, மனந்திரும்பி, ஜெயங்கொள்ளுகின்றவர்களுக்கோ, தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றார். பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் இந்த உலகத்திலிருந்து வேறுபிரிக்கப்பட்டிரு க்கின்றோம். இது கிருபையின் காலம். ஆண்டவர் இயேசு நமக்காக பரிந்து பேசும் காலம். எனவே, தவறான உபதேசங்களால் பாவங்களை பாராமுகமாக விட்டுவிடாதபடிக்கு, "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."

**வெளிப்படுத்தல் 2:7**

**ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்**;

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகத்தின் தந்திரமான போதனைகளுக்கு நான் செவிகொடுக்காமல், ஆவியானவர் சபைக்கு சொல்கின்றதை கேட்டு, அதன்படி பரிசுத்த வாழ்வை காத்துக் கொள்ள என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அந்நிய பிணைப்புக்கள்

இன்றைய நாட்களிலே தேவனுடைய பிரமாணங்களையும், ஒழுங்கு களையும், பரிசுத்தமாகுதலையும் குறித்து உபதேசிக்கும் போது, தேவ உழியர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் சிலரும், அவர் களை பின்பற்றும் பெருந்தொகையானோரும், இது பழைய ஏற்பாடு, அது புதிய ஏற்பாடு என்று தேவனுடைய ஒழுங்குகளை புறக்கணித்து விடுகின்றார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் அன்றும் இன்றும் என்றும் அன்புள்ளவராகவே இருக்கின்றார். ஆதலால்தான் ஆதியிலே ஆதாம் ஏவாள் பாவம் செய்த போது, அவர் களை அழித்துப் போடாமல், விடுதலைக்கு ஒரு வழியை வாக்களித்தார். அதுபோலவே அவருடைய பரிசுத்தமும், நீதியும் என்றென்றும் மாறாதவைகள். இன்று அந்நிய நுகத்திலே பிணைக்கப்படாதிருங்கள் என்ற உபதேசத்தை, இன் னதென்று அறிந்திருந்தும், அதை தங்களுக்கேற்றபடி மாற்றிக் கொள்கி ன்றார்கள். விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதை புசியாதே என்று கூறினால், தங்கள் இச்சையை நிறைவேற்றும்படி, ஜெபத்தினால் அதை பரிசுத்தமாக்குவோம் என்று தேவ ஒழுங்குளை புரட்டுகின்றார்கள். ஆண் டவராகிய இயேசுதாமே: பெர்கமு சபையோருக்கு அவர்களுடைய நிலைமையைப் பற்றி கூறும் போது, அவர்களின் விசுவாசத்தைக் குறித்து சாட்சி கொடுத்தார். ஆகிலும், சில காரியங்களைக்கு றித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு. விக்கிரகங்களுக்குப் படை த்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம்பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்ப வனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொ ள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு. அப்படியே நிக்கொலாய் மதஸ்த ருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு அதை நான் வெறுக்கிறேன் என்றும் அவைகளில் இருந்து மனந்திரு ம்பும்படிக்கு அவர்களுக்கு எச்சரிக்கையை வழங்கினார். கிருபையின் காலத்தில் வாழும் அருமையான சகோதர சகோதரிகளே, சட்டம் இல்லை நாம் எப்படியும் வாழுவோம் என்று தவறான எண்ணங் கொள் ளாமல், தம்முடைய திருப்பணியை முடித்து பரலோகத்திற்கு திரும்பிச் சென்ற நம்முடைய ஆண்டவராகிய இயேசு சபைகளுக்கு கூறிய எச்சரிப்புக்களை தியானம் செய்து, உங்கள் வாழ்க்கையை அந்த திவ்விய எச்சரிப்பு வார்த்தைகளின் வெளிச்சத்திலே ஆராய்ந்து அறி ந்து, தேவனுக்கு பிரியமில்லாதவைகளை விட்டு விலகுங்கள்.

**வெளிப்படுத்தல் 2:12**

இருபுறமும் கருக்குள்ள பட்ட யத்தை உடையவர் சொல்லுகி றதாவது;

**ஜெபம்**: சுத்தமனசாட்சியை எனக்கு தந்த தேவனே, என் மனம் உம்முடைய பரிசுத்தத்தை குறித்து உணர்வற்று, சூடுண்டு போகாதபடிக்கு, உம்முடைய ஆலோசனைகளை பற்றிகொண்டு நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அன்பும் பரிசுத்தமும்

நம்முடைய ஆண்டவர் இயேசு இந்த உலகத்திற்கு வந்து, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி, பரலோகத்திற்கு சென்று சுமார் இரண்டாயிரம் வருடங்கள் கடந்து விட்டது. ஆனால், இன்று சில வேதப்புரட்டர்கள், இவ்வளவு காலமும் கிறிஸ்துவை பின்பற்றுகின்றவர்களிடம் இல்லாத நவீன உபதேசங்களை போதித்து, தேவன் ஆகாது என்று தள்ளி வைத்த, படைப்புக்களை ஆராதிக்கும் அந்நிய வைபவங்களை, நாங்களே கொண்டாட வேண்டும் என்று, சூரிய வழிபாடுகளிலே சிலரை ஈடுபடுத்தியிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல மதங்கள் மத்தியிலே நல்லிணக்கம் தேவை, அன்பு இருந்தால் போதும். அதுவே இரட்சிப் பின்மையப்பொருள் என்றும் எல்லா வழிகளும் ஒர் இடத்தில் சேரும் என்று உலகதிற்கு ஏற்புடைய உபதேசங்களை கூறுகின்றார்கள். நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தியத்திரா என்னும் சபைக்கு தூது அனுப்பும் போது, அவர்களுடைய நற்கிரியைகளையும், அன்பையும், ஊழியத்தையும், விசுவாசத்தையும், பொறுமையையும் குறித்து சாட்சி கொடுத்தார். அன்பு உட்பட இவ்வளவு நற்கிரியைகள் அந்த சபையார் மத்தியிலே இருந்த போதும், அவர்களுக்குள் புற மத வழிபாடுகளினால் பரிசுத்த குலைச்சல் உண்டாயிருப்பதைஇருப்பதைக் கண்டார். ஆதலால் அவர்களை நோக்கி: “ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு என்னவெனில், தன் னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும் விக்கிரகங்க ளுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய். அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணைகொடுத்தேன் தன் வேசி மார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை.இதோ, நான் அவளைக் கட்டில்கிடையாக்கி, அவளுடனே விபசாரஞ்செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால் அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி, அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன் அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்து கொள்ளும் அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன்.” கடுமையான எச்சரிப்பை வழங்கியிருக்கின்றார்

**வெளிப்படுத்தல் 2:23**

**அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும்;**

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, நான் செய்யும் அன்பின் நற்கிரியைகள், விசுவாசம், பொறுமை போன்றவற்றின் மத்தியிலே பரிசுத்த குலைச்சலானவைகளை பின்பற்றாதபடிக்கு உன் வார்த்தையிலே நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விழித்துக் கொண்டு ஸ்திரப்படுங்கள்

ஒரு நல்ல தந்தையினிடத்தில் தன் பிள்ளையைக் குறித்த அன்பிலே பல அம்சங்கள் அடங்கி இருக்கின்றது. அந்த அன்பிலே அரவணைத்தல், தேற்றி ஆறுதல் படுத்தல், தோளின்மேல் தூக்கி சுமத்தல், பாதுகாத்தால், உணவு ஊட்டுதல், மன்னித்து மறந்துவிடுதல் போன்றவை அவற்றுல் சில. அந்த அன்பின், மறுபக்கதிலே, இன்னும் அநேக காரியங்கள் உண்டு. தன் பிள்ளை நேரிய பாதையிலே நடக்கும்படிக்கு, போதித்து, ஆலோசனை கூறுதல், கடிந்து கொண்டு எச்சரிப்பை வழங்குதல், உணர்வடையும்படி சிட்சை செய்தல் போன்றவைகளும் அடங்கும். எனவே அன்பும் பரிசுத்தமுள்ள பரம தந்தையாகிய தேவனாகிய கர்த்தர், சபையின் போதனைகள் வழியாக, வேத வார்த்தைகள் வழியாக, சொற்பனங்கள் வழியாக, உங்களுக்கு எச்சரிப்பை வழங்கும் போது இடறலடையாதிருங்கள். மனதை கடினப்படுத்தாதிருங்கள். அவர் நம்முடைய பரம தந்தை. மரித்துப் போகும் படிக்கல்ல, மரித்தவைகள் உயிர் பெறும்படிக்கே நமக்கு எச்சரிப்பை வழங்குகின்றார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சர்தை சபையோருக்கு கூறுகையில்: "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய். நீ விழித்துக் கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து. உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை. ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன் நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்." பாருங்கள் முற்காலத்திலே அக்கிரமங்கிளாலும் பாவத்தினாலும் ஆவிக்குரிய மரணம் அடைந்திருந்த அவர்கள், ஆண்டவர் இயேசுவை விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானத்தை பெற்றுக் கொண்டு, அநேக காரியங்களை கேட்டு, தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டார்கள். ஆனாலும், மறுபடியும் ஆவிக்குரிய மரணம் அவர்களை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டதை குறித்து, அவர்களுக்கு சுட்டிக் காட்டி, மறுபடியும் மனந்திரும்ப வேண்டிய அவசியத்தை அவர்களுக்கு தெளிவாக கூறியிருக்கின்றார். பிரியமானவர்களே, கர்த்தருடைய நாள் நம்மை திருடனைப் போல பற்றிக் கொள்ளாமல் இருக்கும்படிக்கு, நாம் எப்போதும்விழிப்புள்ளவர்களாக வாழும்படிக்கு, மாறுபாடான உபதேசங்களுக்கு செவி சாய்க்காமல், சத்திய வழியிலே முன்னேறுவோமாக.

**வெளிப்படுத்தல் 3:2**

**நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து;**

**ஜெபம்:** கிருபை நிறைந்த பிதாவே, நான் வெண் வஸ்திரம் தரித்து உம்மோடு வாழும்படிக்கு, நீர் தந்த வஸ்திரங்களை நான் அசுசிப்படுத்தாமல், பரிசுத்தத்தை தேவ பயத்தோடு காத்துக் கொள்ள என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீ ஜாக்கிரதை யாயிருந்து, மனந்திரும்பு

லவோதிக்கேயா என்னும் சபை தன்நிறைவு அடைந்திருந்தால், அந்த சபையோர், தாங்கள் ஐசுவரியவான்களென்றும், திரவியசம்பன்னர்களென்றும், தங்களுக்கு ஒரு குறைவுமில்லையென்றும் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஆண்டவராகிய இயேசு அவர்களுடைய நிலைமையைக் குறித்து கூறும் போது, "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல்" இருக்கின்றாய் என்று கடிந்து கொண்டார். இந்த லவோதிக்கேயா சபையானது ஆவிக்குரிய சபையாக இருந்ததைக் குறித்து தேவ ஊழியராகிய பவுல், கொலோசேயர் நிரூபத்திலே குறிப்பிட்டிருக்கிறதைக் காணலாம். (கொலோசேயர் 2ம் அதிகாரம்). காலங்கள் கடந்து செல்லும் போது, உலக ஐசுவரியத்தால் அந்த சபையானது நிறைவு கண்டிருந்ததால், அவர்கள் தங்கள் நிலையைக் குறித்து திருப்தியுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால், அவர்களோ, குளிருமல்லாமல் அனலுமல்லாமல் வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால், உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன் என்று ஆண்வராகிய இயேசு கூறியிருக்கின்றார். ஆவியிலே தொடங்கிய ஆரம்பம் பிற்பாடு மாம்சத்திலே வளர்ச்சியடைந்து விட்டது. அதாவது, கிறிஸ்தவர்கள் என்ற போர்வையின் கீழ், உலகதின் காரியங்களால் நிறைந்திருந்தார்கள். இந்த நிலைமையானது சாத்தியம் இல்லை என்ற சில தவறான போதனைகள் ஆங்காங்கே தொனிக்கின்றது. இவர்கள் தங்களுக்கென்று உலக ஐசுவரியங்களை சேர்த்து வைத்திருப்பதால், ஆண்டவராகிய இயேசு கூறிய வார்த்தைகளுக்கு விரோதமாக பிரசங்கித்து வருகின்றார்கள். மேலும் நம்முடைய அன்புள்ள ஆண்டவர் அவர்கள் அழிந்து போகாதபடிக்கு அவர்களை எச்சரித்து, அவர்கள் மறுபடியும் ஆவிக்குரிய நிலையை அடைவதற்குரிய ஆலோசனையை கூறியிருக்கின்றார். நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன் ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான் என்று ஆண்டவராகிய இயேசு அழைக்கின்றார். எனவே கர்த்தருடைய எச்சரிப்பின் சத்தம் தொனிக்கையில் நீங்கள் அவரண்டை சேர்ந்து கொள்ளுங்கள்.

**வெளிப்படுத்தல் 3:19**

**நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு.**

**ஜெபம்:** பரிசுத்த வாழ்விற்கு என்னை வேறு பிரித்த தேவனே, இந்த உலக அளவுகோல்களால் என் ஆவிக்குரிய வாழ்வை நிர்ணெயிக்காமல், உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே ஆராய்ந்து அறிய கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவுள்குள் ஜெயங்கொள்ளுகின்றவர்கள்

பரிசுத்த வேதாகமத்திலுள்ள கடைசி நூலாகிய வெளிப்படுத்தின விசேஷத்திலே, சபைகளின் நிலைமைகளையும், அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களையும் குறித்து ஆண்டவராகிய இயேசு கூறியவற்றை இந்நாட்களிலே தியானித்து வருகின்றோம். அந்த ஆலோனைகள் இன்று நமக்குரியதாக இருக்கின்றது. லவோதிக்கேயா சபையோர் உலக அளவு கோலின்படி ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்ற பெயரை உடையவர்களாகவும், கிறிஸ்துவினுடையவர்கள் என்று காண்பிக்கும் உலகத்தினால் உண்டான விலையுயர்ந்த வஸ்திர ங்களுடையவர்களாவும், மாம்ச கண்கள் தெளிவுடையவர்களாவும் தெளிவுள்ளவர்களாவும் காணப்பட்டார்கள் என்பதை கட ந்து நாளிலே பார்த்தோம். இவைகளில் ஒன்றும் ஒரு சபையின் ஆவிக்குரிய வளர்ச்சியை காண்பிப்பதில்லை. ஆண்டவராகிய இயேசு அவர்களை நோக்கி: "நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன் என்றார். "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும் அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்." என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. அந்த சபையோர், பொன்னைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்ற விசுவாசத்திலே வளர வேண்டியதாயிருந்தது. உலகத்தினால் உண்டான விலையுயர்ந்த வஸ்திரங்களினால், மதப்பற்றுள்ளவர்கள் என்று தங்களை அலங்கரித்து உலகத்திற்கு காண்பிப்பதைவிட, இரட்சர் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட வெண் வஸ்திரத்தை தரித்தவர்களாக காணப்பட வேண்டும். மாம்ச கண்கள் தெளிவாக இருப்பதைவிட, தேவ சித்தத்தை உணர்ந்து, அவர் வழியிலே நடப்பதற்கு பிரகாசமுள்ள மனக்கண்கள் வேண்டும். அந்த சபையோருக்கு மட்டுமல்ல, நாமும் இந்த உலக ஆசீர்வாதங்களினாலும், வெளித்தோற்றத்தின்படி மாத்திரம் நாம் கிறிஸ்தவர்களாக இருக்காதபடிக்கு, கிறிஸ்துவுக்குள் இந்த உலகத்தை ஜெயங்கொள்ளின்றவர்களாக முன்னேறிச் செல்வோமாக.

**வெளிப்படுத்தல் 3:21**

**ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்**

**ஜெபம்:** பரலோக தேவனே, விசுவாசித்தில் வளர்ந்தவர்களாவும். கறைபடாத வெண்வஸ்திரம் தரித்தவர்களாவும், வஞ்சிகப்பட்டுபோதபடி பிரகாசமுள்ள மனக்கண்களையுடையவர்காளவும் வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பரலோகத்திற்குரியவைகளை தேடுங்கள்

**கொலோசெயர் 3:2**

**பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.**

அதிஷ்டம், அதிஷ்டம், அதிஷ்டம் என்று தெருவோருமாக நின்று, ஒரு மனிதனாவனன் அதிஷ்ட இலாப சீட்டை வாங்கும்படிக்கு ஒலிப்பெருக்கி வாயிலாக அவ்விழியாய் போகின்ற யாவரையும் அழைத்தான். நீங்கள் இன்றிரவே செல்வந்தர்கள் ஆவீர்கள், இன்றே உங்கள் அதிஷ்ட நாள் என்று மனிதர்கள் மனத்தை கவர்ந்து கொண்டிருந்தான். நூற்றுக் கணக்கானோர் அதை வாங்கினார்கள், ஆனால் ஒரு சிலருக்கே அதிஷ்டம் கிடைத்தது. அதிஷ்டம் கிடைக்காத மற்றவர்கள், மறு நாளிலே அவன்மேல் கோபம் கொண்டார்கள். அதற்கு அவன் அவர்களை நோக்கி: உங்களுக்கு அதிஷ்டம் இல்லை. திரும்ப முயற்சி செய்யுங்கள் என்று நாள்தோறும் தன் வியாபாரத்தை பெருக்கிக் கொண்டே இருந்தான். நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று, சிலர், கர்த்தருடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் அதிஷ்ட இலாபச் சீட்டு விற்கின்றவர்களைப் போல, விற்கின்றார்கள். உங்களுக்கு ஆசீர்வாதம், ஆசீர்வாதம், ஆசீர்வாதம் என்று அழைக்கின்றார்கள். அப்படியாக ஒரு சிலர் காலப்போக்கிலே ஐசுவரியத்தை அடைகின்றார்கள். மிகுதியானவர்கள் அப்படிப்பட்ட போதனைகள் செய் பவர்களை நோக்கி:நாங்களும் உன் வார்த்தையை நம்பி வந்தோமே, ஆனால் எங்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லையே என்று கூறினால், அதற்கு பதிலாக: உங்கள் விசுவாசம் இன்னும் போதாது என்று தங்கள் பேச்சினால் சமாளித்து விடுகின்றார்கள். பிரியமானவர்களே, இப்படிப்பட்ட போதனைகளுக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். நம்முடைய அழைப்பும் தெரிந்து கொள்ளுதலும் அழிந்து போகின்ற இந்தப் பூமிக்குரியதல்ல. ஒருவேளை, ஒருவனுக்கு கர்த்தர் வரங்களையும், வளங்களையும் கொடுத்தால் அதற்கு காரணங்கள் இருக்கும். ஆனால், அவன் பூமியிலே தனக்கென்று பொக்கிஷத்தை சேர்த்து வைத்து, என் ஆத்துமாவே களிகூரு, உனக்கும் உன் சந்ததிக்கும் வேண்டிய சொத்துக்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றது என்று கூறுபவனாக இருந்தால், அவன் கர்த்தருடைய பார்வையிலே மதிகேடான இருப்பான். கர்த்தர்மேல் தன் நம்பிக்கையை வைத்து வாழ்கின்றவனே பாக்கியவானாக இருக்கின்றான். அவன் ஏழையாக இருந்தாலும், பணக்காரனாக இருந்தாலும், இந்த உலகத்தின் பொக்கிஷங்களை குறித்து ஆசையற்றவனும், அதை கர்த்தருக்காக இழந்து போக ஆயத்தமுள்ளவனுமாக இருப்பான்.

**ஜெபம்**: விலைமதிக்கமுடியாத இரட்சிப்பை எனக்கு தந்த தேவனே, உம்முடைய இரட்சிப்பை இம்மைக்குரிய அற்பமான அழிந்து போகின்ற இந்த உலக காரியங்களுக்கு ஒப்பிடாமல் இருக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உங்கள் காலம் கடந்து செல்ல முன்பு...

ஆவிக்குரியவர்களாக ஆரம்பித்த சில போதகர்கள், பாதி வழியிலே கிறிஸ்துவின் உபதேசத்தைவிட்டு, கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுக ளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, உலகத்திற்கேற்புடைய உபதே சங்களை சார்ந்து கொள்வதால், அவர்கள் கள்ளப் போதகர்கள் என்ற பெயரைத் தரித்துக் கொள்கின்றார்கள். அப்படியானால், ஆவிக் குரியவர்களாக ஆரம்பித்த விசுவாசி கள், பாதி வழியிலே இந்த கிறிஸ்து வின் உபதேசத்தைவிட்டு, இந்த உலக போக்கிற்கு ஏற்புடையவை களை பற்றிக் கொண்டால், அவர்க ளை எப்படி அழைப்பார்கள்? அவர் களை பின்மாற்றக்காரர் என்று சொல் லிக் கொள்கின்றோம். இந்த இரண்டு சாராரையும் குறித்து சத்திய வேதம் என்ன கூறுகின்றது? "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க் கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்ப னையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்க ளானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்ப வித்தது." (2 பேதுரு 20-22). பிரியமான சகோதர சகோதரிகளே, அரு மையான தேவ அழைப்பை பெற்றவர்களே, பெற்ற அழைப்பின் மேன் மையை உணர்ந்து, தேவனிடமாய் சார்ந்து, அவருடைய வார்த் தையின் வெளிச்சத்திலே முன்னேறிச் செல்லுங்கள். தேவ கிருபை யானது யாவ ரும் குணப்படும்படி அழைக்கின்றது. எனவே, பழைய வாழ்விற்கு திரு ம்புகின்ற எண்ணம் உங்களுக்கு வேண்டாம். அந்தப்படி, முந்தின நட க்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள். கெட்ட குமாரனைப் போல் தூரம் தேவனைவிட்டு தூரம் சென்றிருந்தால், தாமதமின்றி தேவனித்திற்கு திரும்புங்கள். அவர் திரும்பங் கட்ட தயை பெருத்தவராயிருக்கின்றார்.

**எபேசியர் 4:17**

**மற்றப் புறஜாதிகள் தங் கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள்.**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, வீணான வார்த்தைகளுக்கு செவிகொடு த்து, மோசம் போக்கும் அசுத்தங்களுக்கு திரும்பும் எண்ணத்தை என்னை விட்டு முற்றிலும் அகற்றி, தேவ ராஜ்யத்தை நாடித்தேடும் உள் ள த்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வெள்ளி | ஒக்டோபர் 18 | 📖 மாலை வாசகம் – மத்தேயு 12:43–45

# பழைய வாழ்வோடு சமரசம் வேண்டாம்

நீதியின் மார்க்கத்தை அறிந்து, அதன் வழியிலே வாழ்ந்து, பழைய வாழ்க்கைக்கு திரும்புகின்றவர்களைக் குறித்து கூறும் போது "அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையைவிட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். (1 பேதுரு 2:21). மனித குலத்திற்கு உண்டான நித்திய கோபாக்கினையிலிருந்து, அவர் கள் விடுதலையாவதற்காக, பிதாவாகிய தேவன்தாமே தம்முடைய குமாரனாகிய இயேசு வழியாக ஜீவ னுள்ள புதிய நீதியின் மார்க்கத்தை உண்டு பண்ணினார். மீட்பராகிய இயேசு கிறிஸ்துவினாலேயன்றி மனிதகுலத்திற்கு இரட்சிப்பில்லை. அவருக்கு மேலான நாமம் ஒன்றுமில்லை. அவரைவிட்டால், வேறு சத்திய மாரக்கம் இல்லை. அவராலேயன்றி ஒருவனும் பரலோகம் செல்ல முடியாது. ஒருவன் அவரை இன்னும் அறியாதவனாக இருந்தால், அவன் தன் பாவ சாபங்களுக்காக, பரிசுத்தராகிய இயேசு, பரத்திலிருந்து இறங்கி வந்து, இத்தனை பாடுகள்பட்டு, மரிதாரே என்ற அளவற்ற அன்பை அறிந்து கொள்ளும் போது, தன் சாப வாழ்வினின்றுஇரட்சிப்படைவதற்குஅவனுக்கு ஏதுவுண்டாகும். ஆனால், நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு, அதன் மேன்மையை அசட்டை செய்து, சுத்த மனசாட்சியை கறைப்படுத்தி, விட்டு வந்த இந்த உலக ஆசை இச்சைகளுக்கு மறுபடியும் தன்னை ஒப்புக் கொடுக்கின்றவன், இருதயத்தை கடினப்படுத்திக் கொள்வதால், கர்த்தருடைய கிருபையை உணர்ந்து கொள்வது அவனுக்கு மிகவும் கடினமாக இருக்கும். தேவ கிருபையானது அவர்கள் குணப்படும்படி நீடிய பொறுமையோடு காத்திருக்கின்றபோதும், சுவிசேஷத்தைக் குறித்த அவர்களுடைய எண்ணமானது சூடுண்டு போனதால், அவர்கள் திரும்ப முடியாதபடிக்கு, தங்கள் வாழ்விலே அநேக முட்டுக்கட்டைகளை உண்டாக்கி, தங்கள் கைகளுக்கும் கால்களுக்கும் தாங்களே விலங்குபோட்டு, இந்த உலகத்தோடு கட்டிக் கொள்கின்றார்கள். அதனால் அவர்கள் மறுபடியும் திரும்ப எத்தனிக்கும் போது, காற்றுக்கு அடிபட்டு அலைகின்ற அலைக ளைப்போல, உலக போக்கிற்குள் போக்கும்வரத்துமாக இருப்பார்கள். எனவே, விட்டு வந்த ஆசை இச்சைகள், சொந்த பந்தங்கள், நட்புக்களு டன் மறுபடியும் சமரசம் செய்வதைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்ளாக இருங்கள்.

**கொலோசெயர் 3:5**

**ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்.**

**ஜெபம்:** அன்பின் பரம பிதாவே, உம்மைவிட்டு பிரிந்து போகின்ற கொடுமையான எண்ணத்தை என்னைவிட்டு முற்றிலும் அகற்றி, விட்டுவந்தவைகளை மறுபடியும் பற்றிக் கொள்ளாத உணர்வுள்ள இருதயத்தை தந்து வழி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பெற்ற ஈவுகளை விட்டுவிடுகின்றவர்கள்

மேற்கத்தேய நாடுகள் ஒன்றிலே, வாழ்ந்து வந்த வாலிபனொருவன், தவறான நண்பர்களோடு சேர்ந்து, அவர்கள் வழியிலே நடந்து, தன் வாழ்வை கெடுத்துக் கொண்டான். தங்களுடைய மகனானவன், வாழ்வடைய வேண்டும் என்று அவனுக்கு தயை செய்து வந்த பெற்றோரும் இந்த உலகத்தை விட்டு கடந்து சென்று விட்டார்கள். அநேக ஆண்டுகளாக அலைந்திரிந்து, தன்னிடமிருந்த எல்லாவற்றையும் இழந்து, இறுதியிலே வீடு வாசல் ஏதும் இல்லாதவனாக தெருவோரமாக பிச்சையெடுத்து வாழ்ந்து வந்தான். குளிர்காலம் அண்மித்த போது, அவனுடைய வாழ்க்கையைக் கண்ட அரச நலன் விரும்பிகள், அவனை தங்களோடு அழைத்து கொண்டு சென்று, அவனுக்கு தங்குவதற்கு இலவசமான விடுதியொன்றை ஆயத்தப்படுத்தி கொடுத்து, அவன் மாதாந்த செலவிற்கு, பணத்தை கொடுந்து, அவன் புதிய வாழ்வு வாழும்படி அவனுக்கு வேண்டிய வளங்களையும், வசதிகளையும், ஆலோசனைகளையும் அவனுக்கு கொடுத்தார்கள். இவை யாவற்றையும் அவர்கள், அவன் தகுதியின் அடிப்படையிலே அல்ல, அவன்மேல் மனதுருகி, அவனுக்கு இலவசமான ஈவாக கொடுத்திருந்தார்கள். சில மாதங்கள் சென்றபின்பு, வாழ்வின் ஒழுங்கங்களை விரும்பாமல், தனக்கு கிடைக்கும் மாதாந்த உதவித்தொகையை தவறாமல் பெற்றுக் கொண்டு, மறுபடியும் தெருவுக்கு சென்று, அங்கே, பிச்சையெடுத்து பழைய வாழ்வைப் பின்பற்றி வந்தான். அந்த அரச நலன் விரும்பிகள், அவனுக்கு ஈவாக கொடுத்தவைகள் யாவையும் அவனிடமிருந்து எடுத்துப் போடவில்லை. எடுத்துப் போடும் எண்ணமும் அவர்களிடம் இருந்ததில்லை. ஆனாலும். அவனோ, ஈவாக பெற்ற நன்மைகளை அசட்டை செய்து, அதனால் உண்டான நன்மைகளை தன் ஆசை இச்சைகளை நிறைவேற்ற பயன்படுத்தி வந்தான். அருமையான சகோதர சகோதரிகளே, நாம் யாவரும் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். அந்த இரட்சிப்பு நம்முடைய தகுதியினாலோ, கிரியைகளினாலே உண்டானதல்ல. அது தேவனுடைய ஈவு. தேவன் தாம் ஈவாக கொடுத்தவைகளை திரும்ப எடுத்துக் கொள்ளமாட்டார். ஆனால், சில விசுவாசிகளோ, பெற்றுக் கொண்ட ஈவை, அசட்டை செய்து, நிராகரித்து, அவிசுவாசிகளாக மாறி, மேலானவைகளை தேடாமல், பூமிக்குரியவைகளுக்கு திரும்பி விடுகின்றார்கள்.

**2 பேதுரு 3:14**

**கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்.**

**ஜெபம்**: அருமையான இரட்சிப்பை தந்த தேவனே, நீர் அருளிய சொல்லிமுடியாத ஈவை நான் தள்ளிப்போடாதபடிக்கு, அந்த ஈவின் மேன் மையை அறிந்து, உம்முடைய சித்தத்தை என் வாழ்விலே நிறைவேற்ற எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | ஒக்டோபர் 20

📖 மாலை வாசகம் – எபிரெயர் 3:7–8

# கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்

> **எபிரெயர் 4:16**
>
> ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

பரிசுத்தத்தையும், ஒழுக்கங்களையும் குறித்து பேசும் போது, சிலர் உடனடியாக அது பழைய ஏற்பாடு, இது புதிய ஏற்பாடு என்று தர்க்கம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அதே நபர்கள், இரட்சிப்பு தேவனுடைய ஈவு. தேவன் கொடுத்த ஈவை அவர் பறிக்க மாட்டார் என்றும் விதண்டாவதமாக பேசிக் கொள்வார்கள். தகப்பனானவர் தன் பிள்ளைக்கு கொடுத்த ஈவை அவர் மறுபடியும் எடுக்க மாடார். ஆனால், தகப்பனானவர் கொடுத்த ஈவின் மேன்மையை அசட்டை செய்து, அதை எறிந்து போடும், கீழ்படியாத பிள்ளைகள் இருக்கின்றார்கள் என்று, கடந்து நாட்களிலே நாம் தியானம் செய்தோம். பழைய ஏற்பாட்டின் நாட்களிலே, கிருபாசனம் இருக்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள், பிரதான ஆசாரியன்மாத்திரம் வருஷத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான். அபாத்திரனாய் பிரவேசிப்பவன் தேவனுடைய பரிசுத்தத்திற்கு முன் நிற்ககூடாதபடிக்கு, உடடினயாக மரித்துப் போய்விடுவான். ஆண்டவராகிய இயேசுதாமே, நாம் யாவரும் கிருபாசனத்தண்டையிலே தைரியமாக சேரும்படிக்கு பெரிதான சிலாக்கியத்தை எனக்கும் உங்களுக்கும் உண்டு பண்ணினார். அதனால் தேவனுடைய பரிசுத்தம் பழைய ஏற்பாட்டிலிருந்து, புதிய ஏற்பாட்டின் நாட்களிலே குறைவடைந்து போய்விட்டதா? இல்லை, அவர் எப்போதும் ஒருவரும் சேரக்கூடாத ஒளியிலே வாசம் செய்பவர். நாம் அவரிடத்தில் சேரும்படிக்கு, இந்த மகாபெரிதான கிருபையை பொழிந்திருக்கின்றார். நாம் அவருடைய கிருபையினாலே நிர்மூலமாகாதிருக்கின்றோம். நாம் அந்நாட்களிலே வாழ்ந்த ஜனங்களைவிட அதிக பாக்கியம் பெற்றவர்கள். நம் பெலவீனங்களை நேரடியாக கர்த்தரிடம் அறிக்கை செய்து விட்டுவிடும் அருமையான கிருபையை பெற்றவர்கள். அப்படியிருந்தும், ஒருவன், “சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும் என்று பரிசுத்த வேதாகமம்ம கூறிகின்றது. இதை எபிரெயர் 10ம் அதிகாரம், 26ம், 27ம் வசனங்களிலே வாசித்துப் தியானியங்கள். உங்கள் பெலவீனங்களை அறிக்கைசெய்து விட்டுவிடுங்கள்.

**ஜெபம்:** ஒருவரும் சேரக்கூடாத ஒளியிலே வாசம் செய்யும் தேவனே, உம்முடைய பரிசுத்தத்தைகயும், உம்முடைய கிருபையையும் நான் அசட்டை செய்யாமல் வாழ உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள் | ஒக்டோபர் 21 | 📖 மாலை வாசகம் – தீத்து 1:16

# தேவபக்தியின் வேஷம் தரித்தவர்கள்

**2 தீமோத்தேயு 3:5**

**தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்;இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு.**

ஒரு ஊரிலே இயங்கி வந்த சனசமூக நிலையத்தினால், சில தொண்டர்கள் ஒன்றுகூடி, வருடந்தோறும், ஏழை எளியவர்களுக்கு உதவும்படிக்கு, நிதி சேகரிப்பதற்காக நிகழ்சியொன்றை நடத்தி வந்தார்கள். அந்த ஊரிலுள்ள வியாபாரியொருவன், அந்தத் திட்டத்திற்கு உதவுவதற்கு மனதில்லாதிருந்த போதும், அந்த நிகழ்ச்சிக்கு சென்று, தான் ஆதரவு வழங்குவதைப்போல தன்னை காட்டிக் கொண்டான். அவ னுடைய நண்பனானவன், அவனை நோக்கி: உனக்கு இந்தத் திட்டம் பிடிக்கவில்லை என்றால், பின்னர் ஏன் அதற்கு ஆதவரவு வழங்குவதைப் போல பாசாங்கு செய்கின்றாய். அந்தத் திட்டத்திலே பங்கு பற்ற வேண்டும் என்று யாரும், எவரையும் கட்டாயப்படுத்துவதில்லையே என்று கூறினான். அதற்கு அந்த வியாபரியானவன்: ஊர் மக்களில் அதிக படியானோர், அப்படிப்பட்ட திட்டங்களை விரும்புகின்றார்கள். நான் அங்கு செல்லாவிட்டால், ஊர் மக்கள் மத்தியிலே என் செல்வாக்கு குறைந்து விடும். அது என் வியாபாரத்திற்கும் கூடாது. எனவே நான் அங்கு சென்று சிறிய முதலீட்டை செய்தேன் என்றான். பாருங்கள், அந்த மனிதனாவன், அந்தக் நற்கிரியையின் கருப்பொருளையும், அதன் மேன்மையையும் குறித்து எண்ணமற்றவனாக வாழ்ந்து வந்த போதும், சுய இலாபம் கருதி, ஊரார் மத்தியிலே தன் பெயர் மேன்மைபட வேண்டும் என்ற காரணத்தினால் அரை மனதுடன் அந்தத் திட்டத்திலே பங்கேற்பவன் போல பாசாங்கு செய்து கொண்டான். அவ்வண்ணமாகவே இன்று சில மனிதர்கள் கிறிஸ்தவர்கள் என்ற பெயரை தரித்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் தேவ ஆலயதிற்கும் சென்று வருகின்றார்கள். ஆனால், இவர்களோ கிறிஸ்துவைப் போல வாழ வேண்டுமென்றும் மனதில்லாதவர்களாகவே இருக்கின்றார்கள். நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையற்றவர்கள். ஊரிலே மனிதர்கள் மத்தியிலே தாங்களும் தேவ பக்தியுள்ளவர்கள் என்று காண்பிக்கும்படிக்கு தங்கள் செல்வம் தேவபக்தியினால் உண்டானது என்று கூறி, உலகத்திற்கும் தேவனுக்கும் ஊழியம் செய்யலாம் என்று முயற்சிக்கின்றார்கள். அவர்கள் தேவன், அவர்களுடைய வயிறு. அவர்களுடைய இருதயம் பொருளாசையால் நிறைந்திருக்கின்றது. இவர்களால் சத்திய மார்க்கம் துஷிக்கப்படுகின்றது. நீங்களோ, இவர்களை விட்டு அகன்று, உண்மையுள்ள மனதோடு தேவனுடைய ராஜ்யத்தை நாடித் தேடுங்கள்.

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் வேறு காரியங்களை மனதில் கொண்டவனாய், உமது சபையிலே குழப்பம் ஏற்படுத்தாதபடிக்கு, தெளிந்த புத்தியை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அறிக்கையும் கிரியையும்

ஆதி அப்போஸ்தலர்களுடைய நாட்களிலே, அவர்கள் மிகுந்த பலத்துடன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை குறித்து சாட்சி கொடுத்து வந்தார்கள். அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. அந்நாட்களிலே ஏற்பட்ட குறைவுகளை நிறைவு படுத்தும்படிக்கு, நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப் கட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலரின் பாதத் திலே வைத்தார்கள். அவனவனுக்னுத் தேவை யானதற்குத் தக்கதாய் பகிர்ந்து கொடு க்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும்குறைவில்லாதிருந்தது. அப்போஸ்தலரினாலே ஆறுதலின் மகன் என்று அர்தங்கொள்ளும் பர்னபா மறு பேர் பெற்றவனுமாகிய யோசே என்பவனும், தனக்குண்டாயிருந்த நிலத்தை விற்று, அதின் கிரயத்தை கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். ஆதிச் திருச்சபையிலே யாவும் ஒழுங்கும் கிரமமுமாக நடந்து வந்தது. யாவரும் இசைந்த ஆத்துமாக்களாக, ஒருமைபா ட்டுடன் செயற்பட்டு வந்தார்கள். அந்தச் சபையிலே அனனியா என்னும் பேருள்ள ஒருவனும் அவன் மனைவியாகிய சப்பீராளும், மற்றய விசுவாசிகள் செய்தது போல, தாங்களும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். மற்றவர்கள் செய்த பிரகாரமாகவே கிரயத்தை கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். ஆனாலும், ஒரு பங்கை தங்களுக்கென்று வஞ்சித்து வைத்தார்கள். அதாவது, சபையிலே விசுவாசியாக இருக்க வேண்டும். மற்றவர்கள் தாங்களாக முன்வந்து செய் யும் நற்கிரியைகளை, தங்களுக்கு பெயருண்டாக்க செய்யவும் வேண் டும். ஆனாலும், மற்றவர்கள் போல, மனப்பூர்மாக செய்யவோ மனதி ல்லை. கணவன் மனைவியாக திட்டமிட்டு, பரிசுத்த ஆவியானவருக்கு பொய் சொல்ல துணிகரமுள்ள இருதயமுள்ளவர்களாக இருந்தார்கள். அதனால், அவர்கள் இருவரும், தேவ ஊழியராகிய பேதுரு அவர்களோடு பேசிக் கொண்டிருக்கும் போது விழுந்து ஜீவனை விட்டார்கள். பிரியமானவர்களேநீங்களோ, மற்றவர்கள் செய்கின்றார்கள் எனவே நானும் செய்ய வேண்டும் என்று நற்கிரியைகளை செய்யாமலும், உலகப் பொருட்களுக்கும் தேவனுக்கும் ஊழியம் செய்யலாம் என்ற மனதையுடையவர்ளாக இல்லாமலும், உண்மை மனதோடு தேவனை சேவியுங்கள்.

**தீத்து 1:16**

**அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்;**

**ஜெபம்**: சுயாதீனத்தை எனக்கு தந்த தேவனே, நீர் தந்த சுயாதீனத்தை, தவறாக பயன்படுத்தி, உலக ஆசைகளை மனதிலே ஒளித்து வைப்பதற்கேதுவாய் எண்ணம் கொள்ளாதிருக்க எனக்கு உணர்வுள்ள இருதத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்

அது பழைய ஏற்பாட்டின் காலம், அதிலே நியாத்தீர்ப்பு உண்டாயிருந்தது. இது புதிய ஏற்பாட்டின் காலம் இது கிருபையின் காலம் என்று பொதுவாக விசுவாச மார்க்கத்தார் சொல்லிக் கொள்வதுண்டு. அதில் உண்மை உண்டு. ஆனால், சத்தியத்தை சுத்மாக பேசும் ஊழியர்கள், சிலரின் தவறான வழிகளை சுட்டிக் காட்டும் போது, அவர்கள் தங்கள் தவறான வழிகளை விட்டு விலக மனதில்லாதவர்களாய், உலகத்தை சபைக்கும் கொண்டுவரும்படிக்கு, தங்கள் வழிகளை நியாயப்படுத்தும்படிக்கு, அப்படிப் பட்ட ஊழியர்களை நோக்கி: "நீங்கள் நியாயப்பிரமாண போதகர்கள், இது புதிய ஏற்பாட்டின் காலம். தேவ கிருபையை பற்றி உங்களுக்கு அறிவில்லை" என்று சந்தர்பத்திற்கு தப்பிக் கொள்ளும்படி கூறிக் கொள்வார்கள். புதிய ஏற்பாட்டின் ஆரம்ப நாட்களிலே, அனனியா என்னும் விசுவாசியும், அவன் மனைவியாகிய சப்பீராள் என்பவளும், ஒருமனப்பட்டு, திட்டமிட்டு, பரிசுத்த ஆவியானவருக்கு பொய் சொல்லும்படிக்கு சாத்தானுக்கு தங்கள் இருதயத்திலே இடம் கொடுத்தார்கள். அந்த இடமானது பொருளாசையினாலே உண்டாயிற்று. அவர்கள் அந்த இடத்திலேயே விழுந்து மரித்துப் போனார்கள். இவர்களின் செய்கைகளின் தார்பரியத்தைக் குறித்து நாளையே தியானத்திலே நாம் ஆராய்ந்து பார்க்காலம். ஆனால், இன்றைய நாளிலே, தேவனுடைய பரிசுத்தம் அன்றும் இன்றும் என்றும் மாறாதது என்பதை நீங்கள் திட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். ஆதி அப்போஸ்தல சபையிலே அனனியா சப்பீராளுக்கு நடந்தது போல இன்றும் நடக்குமாக இருந்தால், சபையிலே யார் தப்பித்துக் கொள்வார்கள்? தேவனுடைய பரிசுத்தம் மாறவில்லை. ஆனால், நாம் நிர்மூலமாகாதிருப்பது தேவனுடைய சுத்த கிருபையாக இருக்கின்றது. அதனால், நாம் துணிகரம் கொண்டு, அது பழைய ஏற்பாடு, இது புதிய ஏற்பாடு என்று மதியீனர்களைப் போல பேசாமலும், தேவனுடைய நீடிய பொறுமையை அசட்டை செய்யாமலும், தாழ்மையுள்ள உள்ளத்தோடு, சத்தியத்திற்கு கீழ்படிந்து, உங்களுக்கு கொடுக்கப்பட்ட நாட்களை குணப்படும்படி பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள். தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.

**1 தெசலோனிக்கேயர் 4:8**

**ஆகையால் அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்.**

**ஜெபம்:** நேற்றும் இன்றும் என்றும் மாறாத பரிசுத்தமுள்ள தேவனே, உம்முடைய நீடிய பொறுமையை நான் அசட்டை செய்து துணிகரமான பேச்சுகளை பேசாமல், மனத்தாழ்மையோடு மனந்திரும்பும் இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# துணிகரமான செயல்களை விட்டுவிடுங்கள்

அனனியாவும் அவனுடைய மனைவியாகிய சப்பீராளும், மற்றய விசுவாசிகள் செய்தது போலவே, தங்கள் காணியாட்சியை விற்றார்கள். விற்ற கிரயத்தை ஒரு பங்கை தங்ளுக்கென்று வைத்துக் கொண்டு, ஒரு பங்கை கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். இந்த செயலலை அவர்கள் செய்ய துணிந்ததைக் குறித்து அப்போஸ்தலராகிய பேதுரு அவர்களுக்கு உணர்த்தும் போது, அவர்கள் விழுந்து மரித்துப் போனார்கள். பிரியமானவர்களே, இந்த சம்பவமானது காணிக்கையை குறித்த விஷயமா? இல்லை. நம்மிடம் இருப்பதையெல்லாம் விற்று முழுமையாக சபையிலே கொடுக்க வேண்டுமா? இல்லை. மற்றய விசுவாசிகள் செய்கின்றவைகளை நாமும் செய்ய வேண்டிய நிர்பந்தம் உண்டோ? இல்லை. நன்றாக கவனியுங்கள்! விசுவாசிகளாகிய திரளாக கூட்டத்தார் ஒரே இருதயமும், ஒரே மனமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும், தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை. சகலமும் அவர்களுக்குப் பொதுவாக இருந்தது. சபையானது பூரண கிருபையால் சூழ்ந்திருந்தது. விசுவாசிகள் மத்தியிலே அன்பும், பரிசுத்தமும் நிறைவாக இருந்தது. யாவும் ஒழுங்காகவும் கிரமமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையிலே, அவர்கள் மத்தியிலிருந்த அன்பையும், பரிசுத்தத்தையும், ஐக்கியத்தையும், ஒழுங்கைளும் குலைத்துப் போடும்படி வஞ்சகத்தின் ஆவிக்கு அனனியாவும் சப்பிராளும் இடம் கொடுக்க துணிகரம் கொண்டார்கள். கொடுத்தவர்கள் யாவரும், கர்த்தர் தம்மை குறைவின்றி போஷிப்பார் என்ற நம்பிக்கையிலே உறுதியாய் இருந்தார்கள். ஆனால், இவர்களோ, கர்த்தர்மேல் சந்தேகம் உள்ளவர்களாக பணத்தின் ஒரு பகுதியை தங்களுக்கென்று எடுத்து வைத்தார்கள். அந்நாட்களிலே, விசுவாச மார்க்கத்தாருக்கு, பிரதான ஆசாரியர்கள், மூப்பர்கள் சங்கத்தால் உபத்திரவம் உண்டாயிருந்தது. அதை அவர்கள் கர்த்தரிடம் அறிக்கையிட்டு, ஒருமனப்பட்டவர்ளாக கூடி ஜெபம் பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அவர்கள் மத்தியிலே நிறைவாக இருந்தது. நற்செய்தியை தைரியமாக சொன்னார்கள். வஞ்சிக்கும் ஆவிக்கு இடம் கொடுத்த அனனினாவும் சப்பிராளும் அந்த பரிசுத்ததிற்கு முன் நிலைநிற்க முடியாமல், விழுந்து ஜீவனை விட்டார்கள். எனவே, அன்பு நிறைவாக இருக்கின்றது என்று கூறி, கர்த்தருடைய நீடிய பொறுமையை அசட்டை செய்யாதிருங்கள். தாமதித்தாலும் கணக்கு கொடுக்கும் காலம் உண்டு.

**அப்போஸ்தலர் 5:9**

**கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன?**

**ஜெபம்**: நீடிய பொறுமையுள்ள தேவனே, பரிசுத்த குலைச்சலை உண்டு பண்ணும் துணிகரமான இருதயத்தை என்னைவிட்டு முற்றிலும் அகற்றி, உம்மடைய சித்தத்தை நிறைவேற்றும்படி எனக்கு பெலன் தந்து என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடும், அவரோடு இருந்த சீஷர்களோடும் சேர்ந்து, திருப்பணியை செய்து, அவரோடு உணவுண்ட யூதா ஸ்காரியோத், தன்னுடைய ஆண்டவரை முப்பது வெள்ளிக் காசுக்கு விற்றுப் போட்டான். சர்வத்தையும் படைத்த சர்வ வல்லவரை தாபரமாக கொண்டிருப்பதற்கு பதிலாக, மத அதிகாரிகளோடு இசைந்து கொள்ளவதையும், அற்பமான உலக ஐசுவரியத்தையும் மேன்மையாக எண்ணி, அவரை திட்டமிட்டு காட்டிக் கொடுத்தான். இன்றும் கர்த்தரை அறிந்து, அவரை ஏற்றுக் கொண்ட விசுவாமாரக்கத்தாரில் சிலர், விலைமதிக்க முடியாத, தம்முடைய பரிசுத்த இரத்தினாலே தங்களை கிரயத்திற்கு கொண்ட ஆண்டவருக்கு, ஒரு கிரயத்தை வைக்கின்றார்கள். அதாவது, அவருக்கு பதிலாக, இந்த உலக பொருட்களுக்காக, ஆசை இச்சை களுகளை தெரிந்து கொள்கின்றார்கள். இரண்டு எஜமான்களுக்கு ஊழி யம் செய்ய ஒருவனாலும் கூடாது, ஒருவனை நேசித்து மற்றவனை வெறுத்துக் கொள்வான். உலக பொருட்களுக்கும் தேவனுக்கும் ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது என்று மலைப் பிரசங்கத்திலே ஆண்டவராகிய இயேசு கூறியபோது, யூதாஸ் அங்கே அவரோடும் மற்றய சீஷர்களோடும் இருந்தான். யூதாஸ் பரத்திலிருந்து வந்த தன் எஜமானனாகிய இயேசுவை தள்ளிவிட்டு, தனக்கென்று பொருளாசையை தன் ஆண்டவனாக்கிக் கொண்டு, தன் முடிவை தானே நிர்ணெயித்துக் கொண்டான். ஒரு எஜமானன் எப்படியோ அவனை பின்பற்றும் சீஷனும் அப்படியே இருப்பான். ஆண்டவர் இயேசுவை எஜமானன் தன் எஜமானனாக்கிக் கொண்டவன், அழியாமையை தரித்தவனாக பரலோகத்திலே நீடுழீயாய் வாழ்ந்திருப்பான். உலக பொருட்களை தன் எஜமானன் ஆக்கிக் கொண்டவன், அது அழிவை காண்பது போல, அவனும் அழிவை தனதாக்கிக் கொள்வான். பிரியமான சகோதர சகோதரிகளே, கிரயத்திற்கு கொண்ட உங்கள் ஆண்டவராகிய இயேசுவிற்கு நீங்கள் எந்த விலையை கொடுப்பீர்கள்? உலகமும் மாம்சமும் பிசாசுக்குட்பட்டிருக்கின்றது, அவற்றை ஒருவன் தன் ஆண்டவனாகிக் கொண்டால், அதுவே அவன் தன்னை மீட்ட ஆண்டவரை விற்றுப் போடும் விலையாக இருக்கும். எனவே, கற்றவைகளில் நிலைத்திருங்கள். செழிப்பின் உபதேசத்தை தள்ளி விடுங்கள். உலக பொருளுக்கு அடிமையாகதிருங்கள். உங்கள் ஆத்துமாவை மீட்டுக் கொண்ட ஆண்டவர் இயேசுவில் நிலைத்திருங்கள்.

**1 கொரிந்தியர் 7:23**

**நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, விலைமதிக்க முடியாத இரட்சிப்பை பெற்ற நான், அழிந்து போகின்ற இந்த மாம்ச இச்சைகளுக்காக, அழியாமையை இழந்து போகாதபடிக்கு, மனப் பிரகாசமுள்ள கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுக்குரிய மகிமை...

**சங்கீதம் 29:2**

**கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்;**

புதிய ஏற்பாட்டின் காலத்திலே, பிரதியட்சமாக நிறைவேறிய, தேவனுடைய நியாயத்தீர்ப்பையும் அதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள கூடியவைகளையும் தியானத்திற்கெடுத்துக் கொள்வோம். ஆதி அப்போஸ்தலரின் நாட்களிலே, எரோதுராஜா சபையிலே சிலரை துன்பப்படுத்த தொடங்கி, யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபை பட்டயத்தினாலே கொலை செய்தான். அது அன்றைய யூதமார்கத்தாருக்கு பிரியமாயிருந்ததால், பேதுருவையும் பிடித்து கடுங் காவலிலே வைத்தான். அவன் பேதுருவை வெளியேகொண்டுவர முன் குறித்த நாளுக்கு, முதல் நாளிலே, அற்புதவிதமாக, கர்த்தருடைய தூதன் பேதுருவை சிறைச்சாலைக்கு வெளியே கொண்டு வந்து விட்டான். குறித்த நாளிலே: ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக் கொண்டு, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து, தீரு சீதோன் பட்டணத்தாருக்கு பிரசங்கம் பண்ணினான். அப்பொழுது ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவ சத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். அவன் புழுபுழுத்து இறந்தான். ராஜாவனவன், நீதியையும் நியாயத்தையும் நடத்த நியமிக்கப்பட்டவன். ஆனால், ஏரோது ராஜாவோ, ஜனங்களை பிரியப்படுத்தும்படிக்கு அநீதியையும், அநியாயத்தையும் நடத்துகின்றவனாக இருந்தான். இன்று தேவ சபைகளிலே கூட, சிலர் ஜனங்களை தக்க வைப்பதற்காக தேவ நீதியை நிறைவேற்றாமல், அநியாயங்களை சகித்து கொள்ள ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். அது தேவ பிள்ளைகளுக்குரிய தெய்வீக சுபாவம் அல்ல. ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் கர்த்தருடையவைகள். பலவான்களின் புத்திரரே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள், கர்த்தருக்கே அதை செலத்துங்கள், கர்த்தருடைய நாமத்துக்குரிய மகிமையை அவருக்கு செலுத்துங்கள் என்று தேவ பக்தன் பாடியிருப்பதை பரிசுத்த வேதாகமத்திலே காணலாம். ஆனால், இன்று தேவனுடையவர்கள் என்று கூறும் சிலர், தேவனுக்குரிய மகிமையை செலுத்தாமல், ஜனங்களை கவர்ந்து கொள்வதற்காக, மகிமையை தங்களுடையதாக்கிக் கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, காலம் தாமதித்தாலும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு உண்டு. ஞானமுள்ளவர்களோ, கிருபையின் காலத்திலே, மனந்திரும்பி தேவனுடைய பாதத்திலே தங்களை ஒப்புக் கொடுப்பார்கள்.

**ஜெபம்**: மகிமை நிறைந்த தேவனே, நியாயத்தீர்ப்பைக் குறித்து அசட்டை செய்து, நீதியையும் நியாயத்தையும் நிறைவேற்றாமல் வாழாதபடிக்கு, உமக்கு பயப்பிடுகின்ற பயம் என்னில் எப்போதும் இருப்பதாக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பரலோக பொக்கிஷங்களையே நாடுங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த ஆண்டு வந்த ராஜாவானவன், பல ஆண் டுகளாக நல்ல ஆட்சி ஆண்டு வந்தான். அவனுடைய குமார னானவன் வளர்ந்துவாலிப வயத்தை அடைந்த பின்னர், ஒரு வகையான போதை வஸ்துக்கு அடிமையாகிவிட்டான். ராஜாவானவன், பல வழிகளால் அவனைக்குணப்படுத்த முயற்சி செய்தபோதும், குமாரனானவனை அந்த அடிமைத்தனத்தி லிருந்து விடுதலை யாக முடியாம ற்போய்விட்டது. தன் குமாரனான வன், சட்டத்தின் முன் குற்றவாளியாக காணப்படாதபடி க்கு என்ன செய்யலாம் என தன் மந்திரியிடம் ஆலோசனை கேட்டான். அதற்கு மந்திரியானவன், ராஜாவை நோக்கி: ராஜவே, இந்த ராஜ்யத்தின் எல்லையெங்கும் அந்தப் போதைப் பொருள் தடை செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் பலர் குற்றவாளிக ளாக சிறையிலே இருக்கின்றார்கள். பல பெற்றோர் தங்கள் பிள்ளை களைக் குறித்து வேதனையோடு இருக் கின்றார்கள். அந்தப் போதை ப்பொருளை உம்முடைய ராஜ்யத்தில் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட விற்ப னைப் பொருளாக்க சட்டத்தை பிறப்பித்து விடும். நாட்டிற்கும் வருமா னம் அதிகரிக்கும், மக்களும் சந்தோஷமாயிருப்பார்கள், உம்முடைய குமாரனும் நிரபராதியாகி விடுவான் என்றான். அன்றுவரைக்கும் நீதி யாக ஆட்சி செய்து வந்த அந்த ராஜாவிற்கு வழியேதும் தெரியாத தால், மந்திரியின் துர்ஆலோச னையை கேட்டு, அந்தப் போதைப் பொருளின் தடையை நீக்கி, விற் பனைப் பொருளாக மாற்றும்படி புதிய சட்டத்தை பிறப்பித்தான். நிலையான பரம தேசத்தில் பொக்கிஷங் களை சேர்க்க அழைக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு பொருள் ஆசை, பண ஆசை என்று கூறாமல், பூமியிலே உங்க ளுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம். பரலோகத்திலே உங்களுக்காக பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் என்று கூறினார். ஆனால் இன்று பணத்தையும் பொருளையும் விரும்பும் சில கள்ளப் போதகர்கள், தங்களுக்குண்டான பணம் பொருள் தேவனால் உண் டான ஆசீர்வாதம் என்று உபதேசங்களை மாற்றி, தேவ பிள்ளைகள் விசுவாசிகளாக வாழும்படிக்கு கற்றுக் கொடுக்காமல், உலக பொரு ளுக்காக தேவனை தேடும்படிக்கு தவறாக உபதேசம் செய்கின்றார்கள். போதைப்பொருளை சட்டமாக்கிய ராஜாவைப் போல, இவர்கள், தேவன் விலக்கியதை, தேவனுடையது என்று போதித்து உலகப் பொரு ளையும், தேவனையும் இணைத்து பேசுகின்றார்கள். இழுப்புண்டு போய்விடாதிருங்கள்.

**மத்தேயு 6:19**

**பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம்**;

**ஜெபம்**: நித்திய வாழ்விற்கு என்னை அழைத்த தேவனே, இந்தப் பூமிக்குரி யவைகளையல்ல, மேலானவைகளை நாடித்தேடும்படிக்கு, இந்தப் பூமிக்கு ரியவைகளை எவ்வளவு அற்பமானவைகள் என்று உணர்ந்து கொள்ளும் இரு தயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சத்தியதினின்று விலகாதபடி பாருங்கள்

மெய்யான பரிசுத்த திரித்துவத்திலே, பிதாவாகிய தேவன், குமாரானாகிய இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவராக மூன்று நபர்கள், ஒன்றாய் இருக்கின்றார்கள். அதற்கு எதிர்ப் பக்கமாக, பொய்க்கு பிதாவாகிய சாத்தானாகிய வலுசர்ப்பம், மிருகம் என்று பெயர் பெற்றிருக்கும் அந்திக் கிறிஸ்து, கள்ளத் தீர்க்கதரிசியாகிய மூவர் இருக்கின்றார்கள். இதை வெளிப்படுத்தல் விசேஷத்திலே 13ம் அதிகாரத்தில் காணலாம். ஆதியிலே தேவன், வார்த்தையினாலே வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவையும் சிருஷ்டித்தார். ஆதாம் ஏவாளை தம்முடைய சயாலாகவும் ரூபமாகவும் உருவாக்கி, தேவ மகிமையை அவர்களுக்கு கொடுத்தார். ஆனால் பிசாசானவனோ, வஞ்சகவார்த்தை யிலே ஏவாளை வஞ்சித்து, ஆதாம் ஏவாளை தன்னோடுகூட நித்திய ஆக்கினைக்குள்ளாக்கினான். பிதாவாகிய தேவன்தாமே, மனித குலத்தை நித்திய ஆக்கினையிலிருந்து மீட்டு, நித்திய ஜீவனை கொடுக்க, தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். வார்த்தையானவர் மனுவுருவாக்கி இழந்து போனதை மீட்டுக் கொள்ள இந்தப் பூமிக்கு வந்தார். நித்திய ஜீவனுக்குரிய வழியை ஏற்படுத்தினார். அந்த நித்திய வழியை அறியாதவர்களின் மனக் கண்களை குருடாக்கும்படிக்கும், ஆண்டவராகிய இயேசுவை பின்பற்றி, அவர் காட்டிய நித்திய வழியிலே நடப்பவர்களை அதிலிருந்து வஞ்சிக்கும்படிக்கும் அந்திக் கிறிஸ்துவின் ஆவியானது இந்த உலகத்திலே செயல்பட்டு வருகின்றது. அந்த ஆவிக்கு வஞ்சிக்கும் ஆவி என்றும் மறுநாமம் உண்டு. அதாவது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சபைக்கு தலையாக இருக்கின்றார். ஆனால் அந்திக் கிறிஸ்துவோ சபையை எதிர்கின்றவனாக வராமல், சபையை ஆதரிப்பவன் போல தன்னை காண்பித்து, விசுவாசிகள் தேவனாகிய கர்த்ரை சேவிக்காமல், சாத்தானை சேவிக்கும்படிக்கு வஞ்சிக்கின்றவனாக வருகின்றான். ஆண்டவரோ, ஆட்டுத்தோலை போர்த்திக் கொண்டு வரும் பட்சிக்கின்ற ஓநாய்களை போல கள்ளத் தீர்க்கதரிசிகள் உங்கள் மத்தியிலே வருவார்கள் என்று எச்சரிப்பை வழங்கியிருக்கின்றார். அந்த வஞ்சிக்கும் ஆவியானது, சாத்தானை சேவிக்கும்படி, சாத்தானின் கீழிருக்கும் உலக பொருட்களை நாடித் தேடுவது தேவ ஆசீர்வாதம் என்றும், அவன் வேத வார்த்தைகளை புரட்டுவான். எனவே மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாயிருங்கள்.

**2 கொரிந்தியர் 11:3**

**ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.**

**ஜெபம்:** மேலானவைகளை நாடுங்கள் என்ற தேவனே, என் மனது கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படிக்கு, வஞ்ச ஆவிகளுக்கு நான் இடங்கொடுத்து வழுவிப்போகாதபடிக்கு என்னை காத்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | ஒக்டோபர் 29 | 📖 மாலை வாசகம் – 1 யோவான் 5:4

# பொருளாசையாகிய விக்கிரக ஆராதனை

எப்படியாக ஒரு விசுவாசி, வஞ்சிக்கப்பட்டு, சாத்தனை சேவிக்கின்றவனாக மாற முடியும்? ஆண்டவராகிய இயேசு, இந்தப் பூமயிலே, தம்முடைய திருப்பணியை ஆரம்பித்த நாட்களிலே, பிசாசானவன் அவரை சோதித்தான். சோதிக்கும் போது, உலகத்தின் ராஜ்யங்கள் எல்லாவற்றையும் அவருக்கு காண்பித்து, நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னை பணிந்து கொண்டால், இவைகளெல்லாம் உமக்குத் தருவேன் என்றான். அப்பொழுதுஇயேசு, அவனை கடிந்து கொண்டு, அப்பாலே போ சாத்தானே என்று துரத்திவிட்டார். அன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சோதித்தவன், இன்னும் தனக்கு சொற்ப காலம் தான் இருக்கின்றது என்று அநேகரை வஞ்சிக்கும்படி சுற்றித்திரிகின்றான். அவனுடைய வஞ்சகங்கள் புதிதானவைகள் அல்ல. எனவே அவன், நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை சோதித்தது போல, விசுவாச மார்க்கத்தாரையும் உலக பொருட்களின் வழியாக சோதிக்கின்றான். அது தேவனுடைய ஆசீர்வாதம் என்று வேத வார்த்தைகளை புரட்டி, அவர்களில் சிலரை வஞ்சித்து, பொருளாசைக்குள் உட்படுத்திக் கொள்கின்றான். பொருளாசையானது அவர்களின் விக்கிரகமாக, தெய் வமாக மாறிவிடுகின்றது. ஆனால், அவர்களோ, உணர்வற்றவர்களாக கர்த்தர் என்னை ஆசீர்வதித்திக்கின்றார் என்று கூறிக்கொண்டு இந்த உலகத்திற்குரியவைகளையே நாடித் தேடுகின்றார்கள். தேவனால் பிறப்பதெல்லாம் இந்த உலகத்தை ஜெயிக்கும். பணமும் பொருளும் உலகத்திற்குற்கும் அதன் ஆளுகைக்குள்ளும் உட்பட்டிருப்பதிப்பதால், அது உலகத்தை ஜெயிப்பதில்லை. உலகமும் அதன் போக்கும் பொல்லாங்கனுக்குள் கிடக்கின்றது. ஆண்டவராகிய இயேசு பிலாத்துவிற்கு முன்னாதாக நிற்கும் போது, என்னுடைய ராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல என்று கூறினார். எனவே, இந்த ராஜ்யத்திற்குரியவைகளையே மேன்மைப்படுத்தி போதிக்கின்றவர்களையும், அவைகளுக்கு பின்பாக செல்லும் விசுவாச மார்கத்தார் என்று பெயர் பெற்றிருக்கின்றவர்களையும் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாயிருங்கள். ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். இவைகளின்பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும்.

**கொலோசெயர் 3:5**

**…விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, பொருளாசையை தங்கள் தெய்வமாக்கிக் கொண்டவர்களின், தவறான உபதேசங்களை நான் பற்றிக் கொண்டு, உணர்வற்றுக் போகாதபடிக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நாளுக்கு நாள் மறுரூபமடையுங்கள்

ஒருவன் குறிப்பிட்ட அந்த புனிதஸ்தலத்திற்கு தன் வாழ்நாட்களிலே ஒருமுறை சென்று வந்தால் அவனுக்கு சொர்க்கம் நிச்சயம் என்று நம்பிக்கை வைத்திருக்கின்ற மனிதர்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதாவது, அவர்கள் அங்கு சென்ற வந்தபின்பு, அவர்கள் வாழ்க்கை எப்படியும் இருக்கலாம், ஆனால், அவர்கள் சொர்க்கம் செல்வார்கள் என்று கூறிக் கொள்கின்றார்கள். அதுபோலவே, கிறிஸ்தவர்கள் என்றுதங்களைகாண்பித்தக் கொள் கின்வர்கள், ஒரு முறை ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானம் எடுத்தால் போதும், அதன் பின்பு எப்படியாக பாவ வாழ்க்கை வாழ்ந்தாலும், அதைக் குறித்து பரலோகத்திலிருக்க தேவ னானவர் கண்டு கொள்ளமாட்டார் என்று உபதேசிக்கின்றார்கள். அதா வது, ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானம் எடுத்த பின்னர், துணிகரமாக குடித்து வெறித்து, இந்த உலகத்தின் போக் கின்படி களியாட்டங்களில் ஈடுபட்டு, விபசாரம், களவு, பொய் போன்ற அசுத்தமாக எல்லா பாவங்களை மனந்திரும்பி விட்டுவிடாமல், செய்து கொண்டிருந்தாலும் நித்திய ஜீவனை அடைந்து கொள்ளலாம் என்று போதித்து வருகின்றார்கள். இவர்களின் தொகையானது கடந்து தசாப்தங்களிலே வளர்ந்து பெருகிக் கொண்டிருக்கின்றது. இது எவ்வ ளவு விசாலமான வழியும், இலகுவாக உபதேசமும் என்று பாருங்கள். இப்படிப்பட்ட உபதேசத்தை ஏற்றுக் கொண்டு சுகபோகமாக வாழ்கி ன்றவர்களை குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். அத்தகைய சபைகளை விட்டுவிலகுங்கள். அத்தகைய உபதேசங்களை செய்கின்ற வர்களை தொலைக்காட்சியிலோ, இன்ரநெற் ஊடகங்கள் வழியாகவே அவர்களை பின்பற்றாதிருங்கள். இவர்கள் சாதுரிய ஞானத்தோடு பேச வல்லவர்கள். இவர்கள் கர்த்தர் நாமத்தை கூறிக் கொண்டு, பெரிதான கட்டிடங்களை கட்டி, வாசல் விசாலமாய் இருப்பதால் திரளான ஜனங் களை தங்கள் வசமாக்கி, அதிக உலக வளங்களையுடையவர்களாக வும், செயற்திட்டங்களை செய்கின்றவர்களாவும் காணப்படலாம். கடைசி நாளிலே, கர்த்தராகிய இயேசு, வெள்ளாடுகளையும் செம்மறி யாடுக ளையும் இரண்டாக பிரிப்பார்.இரண்டு பிரிவினரும் கர்த்தர் இயேசு வின் நாமத்தை அறிந்தவர்கள். ஆனால், வெள்ளாடுகளை பார்த்து உங்களை அறியேன், அக்கிரம செய்கைக்காரரே அகன்று போங்கள் என்று கூறு வார். எனவே, வஞ்சகமான போதனைகளுக்கு இடங் கொடுக்காமல், உங்கள் உள்ளான மனிதனாது நாளுக்குநாள் புதிதாக்கப்படட்டும்.

**2 கொரிந்தியர் 4:16**

**உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படு கிறது.**

**ஜெபம்**: அன்பின் தேவனே, நான் புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளை ப்போல, எப்போதும் ஆயத்தமுள்ளவனாக, கறைதிறையற்ற மணவா ட்டியாக காணப்படும்படிக்கு, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள் உண்டா?

ஆண்டவராகிய இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, சென்ற வாழ்நாட் காலத்திலே, செய்து வந்ததுபோல, உலக களியாட்டங்களோடு நடைபெறும் பாட்டுக் கச்சேரிகளுக்கு, பணம் கொடுத்து அனுமதி சீட்டை வாங்கி சென்றிருக்கின்றீர்களா? அப்படியாக தசாதங்களாக செய்யவில்லை என்று நம்புகின்றேன். ஆயினும், சந்தர்ப்ப சூழ்நிலைகளினாலே, வேலைசெய்யும் இடங்களிலே, அல்லது, பெருநாட்களிலே கடைத்தெருக்களுக்கு செல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்போதும், திருமணவிழாக்களிலே கலந்து கொள்ளும்போதும், அத்தகைய பாட்டுக் கச்சேரிகளை நீங்கள் பார்த்திருக்கலாம் அல்லதுசெய்திகள்வாயிலாகஅறிந்திருக்கலாம். அத்த கைய சில விசேஷ பாட்டுக் கச்சேரிகளுக்கு, பத்தாயிரம் டொலர்களுக்கு அதிகமாக பணம் கொடுத்து ஒரு அனுமதிச் சீட்டை பெற்றுக் கொள்கின்றார்கள். அங்கே, வாத்தியங்களை வாசிக்கின்றவர்கள், எந்த ஆலயத்திலும் வாசிப்பர்களைவிட மிக நேர்த்தியாக வாசிக்கின்றார்கள். இனிமையான குரலிலே பாடுகின்றார்கள், மேடையானது மின்குமிழ்களினால் அழகாக அலங்காரம் செய்யப்பட்டிருகின்றது. நடனமாடி பாடும்போது மேடையிலே புகையடைகின்றார்கள். ஜனங்கள் ஆரவாரத்தோடு திர ண்டு வந்திருப்பார்கள். பாடல்களின் வரிகள் மனதில் உணர்ச்சிகளை தூண்டி விடுவதால், ஜனங்கள் புத்துணர்ச்சியடைந்து, ஆர்ப்பரித்து, கரகோசமிட்டு, சிரித்து, ஆனந்த கண்ணீரோடு, மயக்கம் போட்டு விழுகின்றார்கள். அவை ஒன்றும் பரிசுத்த ஆவியினாலே உண்டானவைகள் அல்ல. ஒருவேளை கர்த்தரை அறிய முன்னரும் இத்தகைய களியாட்ட விழாக்களிலே நீங்கள் கலந்து கொள்ளாதிருந்திருக்காலம். அதனால், சிலர், அந்த உணர்வுகளை சபையிலே கொண்டுவரும்படிக்கு, அவ்வண்ணமாக மேடைகளை அலங்கரித்து, உலகத்திலே நடக்கும் காரியங்களை நடப்பித்து, விசுவாச மார்க்கத்தாரின் மனங்களிலே உணர்வுகளை தூண்டிவிடுகின்றார்கள். சிலர் அதை பரிசுத்த ஆவியின் கிரியை என்று கூறிக் கொள்கின்றார்கள். பரிசுத்தஆவியானவர் வரும் போது, நம்மை சகல சத்தியத்திலும் நடத்துவார். அங்கே பரிசுத்தத்திற்கும், நீதிக்கும், சத்தியத்திற்கும் ஏற்ற மனமாற்றம் உண்டாகும். அவ்விடத்திலே துணிகரம் அல்ல தேவபயம் ஏற்படும். முரட்டாட்டங்களும் கலகங்களுமல்ல. கீழ்படிதலும், மனத்தாழ்மையும் உண்டாயிருங்கும். எனவே, உலகத்திலே நடக்கும் காரியங்களை, துணிகரமாக சபைக்குள் கொண்டுவருகின்றவர்களை குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**ரோமர் 12:2**

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்,**

**ஜெபம்**: பரிசுத்தத்திற்கென்று என்னை அழைத்த தேவனே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, என்னை சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்த கிருபை செய்வீராக இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.